1069

குமரி மலர்

பதிப்பாசிரியர்

ஏ. கே. செட்டியார்

13 வது சுதந்திரத் திருநாளை முழு நம்பிக்கையுடன்
கொண்டாடுவோம்!

கோ-ஆப்டெக்ஸ், பாரத நாட்டு
மக்களின் தேவைகளில்
நபர் ஒன்றுக்கு
18.5 கஜம் துணி வீதம்
2-வது ஐந்தாண்டு
திட்டத்தின் வெற்றியில்
தன் பங்கையும் அளிக்கிறது.

கோ-ஆப்டெக்ஸ்

கைத்தறி ஆடைகள்

உங்கள் உடைக்கும் இதர பல அலங்காரங்கட்கும்

இந்தியா பூராவிலும் 290 விற்பனை
நிலையங்களின்
மூலமாக வினியோகமாகின்றன



சென்னை ராஜ்ய கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கம் லிமிடெட்,
பாந்தியன் ரோடு, எழும்பூர், சென்னை-8

SISTA'S

3716

ANNOUNCEMENT.



"TEXTOOL"

TAKES PRIDE TO ANNOUNCE
THAT THEIR 4 CYLINDER
36 To 86 H. P.
AUTOMOTIVE DIESEL ENGINES

will be out in the market Soon!!
Await Further News !!!

MANUFACTURERS:-

Textool Company Limited,
Post Box No. 221,
COIMBATORE.

Phone: 409
1409

Gram:
'TEXTOLCO'

Vummidiars
JEWELLERY &
SILVERWARE
FAMOUS SINCE 1900
VUMMIDI
RAMIAH CHETTY
GURUSWAMY CHETTY & CO.
JEWELLERS
23-25, CHINA BAZAAR ROAD
MADRAS

மலர் 16 குமரி மலர் இதழ் 5

விகாரி - ஆவணி

உள்ளுறை

பக்கம்

1. இந்தியக் கவர்னர்
—காந்தியடிகள் 1
2. மண்ணுக்குள் பொன் இருக்குமா ?
—வின் பூல் 3
3. ஹாலந்தில் ஓர் இந்தியர் 6
4. தேசீய ஒழுங்குக் கட்டுப்பாட்டுத் திட்டம் 15
5. கெட்ட பழக்கங்கள்
—ஏ. ஆர். ஸ்டாடின் 19
6. டாக்டர் ஸால்க் 26
7. புற்று நோய் 30
8. கடல்
—எஸ். ஸ்ரீநிவாசன் 33
9. புத்தரிடம் காணும் அழகு
—சுவாமி விவேகாநந்தர் 42
10. பணம்
—கலா நிலையன் 47
11. மாணவர்களின் கானக வாழ்க்கை 50
12. சுதந்திரம்
—ஜே. பி. எஸ். ஹால்டேன் 54
13. கூட்டு ஒப்பந்தம் 64
14. கொய்த மலர்கள் 67
15. பாடசாலை - ரயில் கண்காட்சி 77

இந்தியக் கவர்னர்

காந்தியடிகள்

சுதந்திர இந்தியாவில் மாகாண கவர்னர் எப்படி யிருக்கவேண்டும்?

1. இந்தியக் கவர்னரும் அவரைச் சேர்ந்தவர்களும் மதுபானத்தைத் தீண்டாதவராக இருக்க வேண்டும். இந்த மாதிரி அவர் இல்லையேல், மதுவிலக்கு பூரண வெற்றிபெற இயலாது.

2. இந்தியக் கவர்னரும் அவரைச் சேர்ந்தவர்களும் கையால் நூற்ற ஆடைகளையே உடுத்த வேண்டும். அப்பொழுதுதான், கையால் வேலை செய்து வாழ்க்கை நடத்தும் கோடிக்கணக்கானவர்களின் பிரதிநிதியாக அவர் இருக்க முடியும். ஹிம்சையின் அடிப்படையில் இன்றெழுந்துள்ள சமூக அமைப்பில் அஹிம்சை சக்தியை நிர்மாணிக்க இதன்மூலந்தான் முடியும்.

3. இந்தியக் கவர்னர், ஆடம்பரமற்ற ஒரு குடிசை யில்தான் வசிக்கவேண்டும். பிரிட்டிஷ் கவர்னர் இங்கு ஆண்டபொழுது, அவர் ஆதிக்கத்தின் சின்னமாய் விளங்கினர். ஆகவே அவரையும், அவருக்குப் பாது காப்பு அளிக்கும் தாசர்களையும் கொள்ள ஒரு பெரிய கோட்டை வேண்டியிருந்தது. இந்தியக் கவர்னர் இந்த நிலைமையை அடியோடு மாற்றவேண்டும். அநாவசிய மான மேஜை, அலமாரி போன்ற ஆடம்பரப் பொருள்

கள் தேவையில்லை. புனிதமாக உயர்ந்த நோக்கத்துடன் வாழவேண்டும்; பிறருக்காகவே இந்த நிலையை அவர் தம் தினசரி வாழ்க்கையில் கடைப்பிடிக்க வேண்டும்.

4. இந்தியக் கவர்னர், ஜாதி, மத, வருண வேற்றுமை பாராட்டக் கூடாது. எந்த உருவில் இருந்தாலும் சரி, அவர் தீண்டாமையை ஒழிக்க வேண்டும். அவர் இந்தியாவின் பிரஜையானதால், உலகப் பிரஜையாகவும் மாறுகிறார். காலிப்மெர், கோடிக்கணக்கான செல்வத்துக்கு எஜமானராய் இருந்தாலும் இப்படித்தான் அடக்கத்துடன் வாழ்ந்தார் என்று ப்டித்திருக்கிறோம். புராதன காலத்தில் ஜனகர் இப்படித்தான் வாழ்ந்தார். நானே நேரில் பார்த்திருக்கிறேன், நவாபுகளும், பிரபுக்களும் புடை சூழ்ந்திருந்த காலத்திலும் ஈடன் தலைவர் (Master of Eton) இப்படித்தான் வாழ்ந்தார். எனவே கோடிக் கணக்கான எளிய மக்களின் பிரதிநிதிகளான கவர்னர் இதைக் காட்டிலும் அடக்கமாக வாழவேண்டாமா?

5. இந்தியக் கவர்னர், அவர் எந்த மாகாணத்தின் கவர்னராய் இருக்கிறாரோ, அம் மாகாணத்தின் மொழியிலேயே பேச வேண்டும். இந்தியாவின் பொதுமொழியையும் அறிந்திருக்கவேண்டும்.

மேற்குறிப்பிட்டவை, ஏற்க முடியாத கடின நிபந்தனைகள் அல்ல. எப்படியிருக்க வேண்டும் என்பதற்கு இது ஓர் உதாரணச் சித்திரமேயாகும்.

மண்ணுக்குள் பொன் இருக்குமா?

லின் பூல்

பாலை நிலத்துக்கு மேலே நிபுணர் இருவர் விமானத்தில் பறந்துகொண்டிருந்தனர். நிலத்தில் படர்ந்திருந்த பூண்டுகளும் புதர்களும் அவர்கள் கண்ணில் பட்டன. ஒரு மணி நேரம் பறந்தபின் ஓர் உண்மை அவர்களுக்குப் புலனாயிற்று. அந்த இடத்தில் நிலத்தின் உள்ளே செம்பு இருத்தல் கூடும் என்று அவர்கள் முடிவு செய்தார்கள்.

ஒரு மலைநாட்டில் வேறோர் விமானம் பறந்துகொண்டிருந்தது. அதில் இருந்த விஞ்ஞானிகள் நிலத்தை நோக்கிக்கொண்டே சென்றார்கள். தரையில் வளர்ந்த மரங்களைக் கண்டு, உள்ளே தங்கம் இருத்தல் வேண்டுமென்று அவர்கள் ஊகிக்கலானார்கள்.

நாட்டுப்புறம் ஒன்றில் நடந்து சென்றனர் நால்வர். அவர்களும் நில உள்ளியல் (Geology) நிபுணர்கள். நிலத்தில் வளர்ந்த மரங்களின் வகைகளை நோக்கியதும் அவர்களுக்கு ஓர் எண்ணம் தோன்றியது. தரைக்கு அடியில் ஈயமும் துத்தநாகமும் இருக்கலாம் என்று அவர்கள் சொன்னார்கள்.

பாறைகள் உள்ள பாழ் நிலத்திற்கு மேலே பறந்து சென்றது ஒரு ஹெலிக்காப்டர் விமானம். விஞ்ஞானி ஒருவர் அதில் இருந்து ஆராய்ச்சி செய்துகொண்டிருந்

தார். அங்கே யுரேனியம் கிடைக்கும் என்று அவர் சொன்னார்.

புதுமை முறை

இந்த விஞ்ஞானிகள் எவ்வாறு நிலத்துக்கு உள்ளே இருப்பதைக் கண்டுபிடித்தார்கள்? இவர்களுடைய கண்கள் எக்ஸ்-ரேக் கண்களா? தரைக்குள் இருப்பதைக் காண்பதற்கு மிகவும் புதுமையான முறை ஒன்றைக் கையாண்டவர்கள் இவர்கள். அது நிலத்தில் வளரும் புல், பூண்டு, மரங்களைக் கொண்டு நிலத்துக்கு உள்ளே இருக்கும் கனிவளம் காணும் முறை.

இன்னின்ன மரங்கள் செழிப்பாய் வளர்ந்தால் இன்னின்ன கனி வளங்கள் உள்ளே இருக்கலாம் என்று விஞ்ஞானிகள் ஊகிக்கிறார்கள். சில உலோக வகைகளை மரஞ் செடிகள் உட்கொண்டு செழிப்பாய் வளர்கின்றன. எனவே, மரஞ் செடிகளைக் கொண்டு கனி வளங்களைப் பற்றி ஊகிக்கக் கூடியதாகிறது.

பிரிட்டிஷ் கொலம்பியாவில் ஆறாயிரம் அடி உயரத்தில் வளரும் க்ளஸ் பிர், டுவார்ப் ஜூனிப்பர், வாட்ஜ் போல் பைன், மஞ்சள் பைன் ஆகிய மரங்களின் வேர்களிலும் அடி மரங்களிலும் தங்கம் இருப்பதாகத் தெரிந்தது. நிலத்தைத் தோண்டிப் பார்த்தபோது நிலத்தின் உள்ளே தங்கம் இருந்தது. எனவே, மேற்கூறிய மரங்கள் உள்ள இடங்களில் தங்கம் இருக்கும் என்று தெரிகிறது.

நியூ மெக்ஸிகோவில் கடுகு, காட்டு வெங்காயம் முதலிய செடிகள் வளரும் இடங்களில் கந்தகம் காணப்படுகிறது. அதே இடத்தில் வெட்ச், ஆஸ்டர் முதலி

யவை வளர்கின்றன. அவை செலினியம் உள்ள இடங்களில் வளர்பவை. இவ்வாறு கந்தகமும் செலினியமும் உள்ள இடத்தில் யுரேனியம் இருக்கும். மரஞ் செடிகளைச் சோதனை செய்து பார்த்ததில் இது தெரியவந்தது.

கலிபோர்னியா ஆரஞ்சு ஓர் இடத்தில் செழிப்பாய் வளர்ந்தது. தரைக்குள் செம்பு இருத்தல் வேண்டுமென்று விஞ்ஞானிகள் கருதினார்கள். அவர்கள் கருதியவாறே, அந்தப் பகுதியில் செம்பு இருந்தது.

கனிவளம் காணும் மற்ற விஞ்ஞான முறைகளோடு இந்தப் புதிய முறையையும் விஞ்ஞானிகள் இப்பொழுது கையாள்கிறார்கள். இந்த முறை இன்னும் முற்போக்கடையவில்லை. எனினும், நிலத்தை அகழ்ந்து பார்த்துக் கனி வளம் காணும் பழைய முறையை மட்டும் அறிந்தவர்களுக்கு இம்முறை வியப்பூட்டும்.

உண்மை

உண்மையிலும், உண்மையின் மூலமாகவும் நான் அழகைக் காண்கிறேன்; அழகைத் தேடுகிறேன். எல்லா உண்மைகளும்—உண்மையான கருத்துக்கள் மட்டுமல்ல, உண்மையான முகங்கள், உண்மையான சித்திரங்கள் அல்லது உண்மையான பாடல்கள், இவையும்—மிக அழகாக உள்ளன.

மக்கள் பொதுவாக உண்மையில் அழகைக் காணத் தவறிவிடுகிறார்கள். சாதாரண மனிதன் உண்மையை விட்டுப் புறம்பே போய்விடுகிறான். பிறகு உண்மையில் அழகு இருப்பதைக் காணும் சக்தியை இழந்த குருடனாகிறான்.

—காந்தியடிகள்

ஹாலந்தில் ஓர் இந்தியர்

(ஹாலந்து தேசத்தில் ஓர் இந்திய மாணவர் இரண்டு ஆண்டுகள் தங்கிக் கல்வி பயின்ருர். அவருடைய நாட்குறிப்பிலிருந்து சில பகுதிகளை இங்கு வெளியிடுகிருேம்.)

ஹாலந்துக்கு வந்து மூன்று நாட்கள் ஆகின்றன. தனிமை என்னைக் கலக்குகிறது. இந்தியாவிலிருந்து திடீரென்று புறப்பட்டு இந்த நாட்டுக்கு வந்திருக்கிறேன். பழையதும் மனத்துக்குகந்ததுமான அது எங்கே? முற்றிலும் வேறுபட்ட வாழ்க்கை முறையைக் கொண்ட இந்தப் புதிய நாடெங்கே? தாயகத்துக்காக ஏங்குவது என்பது ஒரு புதிய அநுபவம்தான்! ஒவ்வொரு கணமும் ஊரிலுள்ள எனது பெற்ருேரையும் நண்பர்களையும் நாடிச் செல்கிறது என் மனம். எங்கள் வீட்டின் ஒரு மூலையில், எனது கனவுகளையும் செயல்களையும் என்னுடன் பகிர்ந்துகொண்ட அந்தச் சிறிய அறையை நோக்கி, மனம் விரைகிறது. இங்கே, இந்தக் கல்வி நிலையத்தில், இன்முகம் கொண்ட சுறுசுறுப்பான இந்தியர்கள் பலர் இருக்கிருர்கள். தனிமை வாட்டும் இத்தகைய நேரங்களில் அவர்களைப் பார்ப்பது மனத்துக்கு ஆறுதல் அளிக்கிறது. ஆனுல் அதுவும் எவ்வளவு நேரத்துக்கு? அவர்களும் கூட ஏதோ ஒரு புதுவகையாய்ப் புலப்படுகிருர்கள். என்ருல் அதையெல்லாம் சரிக்கட்டிக்கொண்டுபோக முடியவில்லை. வெறுப்பூட்டும் இந்தத் தனிமையிலிருந்து விடுதலை பெறுவதற்கான

ஒரே வழி, கடிதங்கள் எழுதுவதுதான். இந்த இண்டு நாட்களுக்குள் நான் பன்னிரண்டு கடிதங்கள் எழுதி விட்டேன்! நினைவுக் குவியலாக அமைந்த நீண்ட கடிதங்கள்!

* * *

"சைவ"மாக இருப்பது ஒரு சாபக்கேடு போலத் தோன்றுகிறது புலால் உணவுகளை ஒதுக்குவதன் மூலம் வாழ்க்கையில் பாதி இன்பத்தை நான் இழக்கிறேன் என்று எல்லோரும் சொல்லுகிறார்கள். எடுத்தவுடனேயே எல்லோர் எதிரிலும் அவற்றைச் சாப்பிடா விட்டாலும், தனியறையிலாவது நான் அவற்றைச் சுவைக்கத் தொடங்க வேண்டும் என்று நண்பர்கள் ஆலோசனை கூறுகிறார்கள். அவ்வாறு செய்ய முடியவில்லையே என்று வருத்தமாய்த்தான் இருக்கிறது. மதக் கோட்பாடுகளோ, பழைய கட்டுப்பாடுகளோ என்னைத் தடை செய்யவில்லை என்று எனக்கு நன்றாகத் தெரிகிறது. புலாலை மறுப்பதற்கான காரணமாக எடுத்துச் சொல்லுவதற்குக்கூட ஏதுமில்லை. அதைப் பற்றி நான் விவாதிப்பதுகூடக் கிடையாது. என்றாலும் கூட அனைவரும் புகழ்ந்து கூறுவதும் விரும்பி உண்பதுமாகிய கோழிக் கறியில் கூட எனக்கு நாட்டம் செல்லவில்லை.

* * *

நவீன முறையில் அமைத்ததும், வெளிநாடுகள் பலவற்றின் மாதிரிகளை இணைத்து அமைத்ததும் ஆகிய நகரங்கள், ஒரு நாட்டின் உண்மையான வாழ்க்கையைப் பிரதிபலிப்பதில்லை. உண்மையான ஹாலந்தைக் காண்பதற்காக முப்பது மாணவர் கொண்ட எங்கள் கோஷ்டி, பஸ்ஸில் புறப்பட்டது. அந்தச் சுற்றுப்பிரயாணம் மூன்று நாட்கள் நீடித்தது. நீண்டகாலமாகப் பார்க்க

வேண்டும் என்று எண்ணியிருந்த காற்ருடி யந்திரங்கள், பசுமையும் வளமும் கொண்டு விளைந்து குலுங்கும் வயல்கள், இடையிடையே காணும் நன்கு திட்டமிட் டமைக்கப்பட்ட கால்வாய்கள், கொழுத்த கால்நடை மேயும் புல் வெளிகள் ஆகிய எல்லாம் உண்மையான ஹாலந்தை எங்களுக்கு எடுத்துக் காட்டின. அவற் றைப் பார்த்தபோது பொருமையாகக் கூட இருந்தது. டுலிப் பூக்கள் மலரும் பருவம் இன்னும் வரவில்லே. அந்தப் பருவத்தில் வயல்களெல்லாம் பலவித வர்ண ஜாலங்களோடு மிளிரும். வசந்த காலத்தின் வருகையை நான் எதிர் நோக்கி நிற்கிறேன்! நாட்டு மக்கள் அனே வரும் எங்களே அன்புடன் வரவேற்ருர்கள். நாகரிகம் கலக்காத எளிய வாழ்க்கை. முன்னறிமுக மில்லாவிட் டாலும் கூட, நம்மைக் காணும்போது அவர்கள் புன் னகை புரிகிருர்கள். உறுதியான மண்ணேடும், பேரொலி யெழுப்பும் கடலோடும் நீண்ட காலமாகத் தொடர்பு கொண்டவர்கள் என்பதைக் காட்டும் வகையில், அவர் கள் முகத்தில் ஒருவிதத் திண்மை பரவியிருக்கிறது. பெண்கள் கடுமையாக உழைக்கிருர்கள்; கதவுக் குமிழ் களே மிகுந்த அக்கறையுடன் துடைத்துத் தூய்மைப் படுத்துவதில் ஈடுபட்டுள்ள பெண்மணிதான் டச்சு வாழ்க்கையின் சின்னம்போலும்.

புகழ் மிகுந்த கலேக் காட்சிகள் சிலவற்றிற்கும் நாங்கள் சென்றிருந்தோம். ஆம்ஸ்டர்டாமில் வைக்கப் பட்டிருக்கும் ராம்பிராண்ட்டின் ஓவியங்கள், பழங் காலத்தை நம் கண் முன் கொண்டுவந்து நிறுத்து கின்றன. வேறு பல சித்திரங்களும் அந்த வகையில் அமைந்திருந்தன. ஏனே, நவீனக் கலே, என்னேக் குழப்புகிறது! க்ஷேத்திர கணிதத்தையும் பீஜ கணிதத் தையும் விரித்து வகுத்து, பல்வேறு நிறங்களுக்குள்

அடைத்து வைத்திருப்பதை என்னால் எண்ணிப் பார்க்கவே முடியவில்லை. இந்த நவீனக் கலையை விளக்கு மாறு, ஒரு நாள் ஒரு பெண்ணைக் கேட்டேன். நிறங்க ளெல்லாம் அசாதாரணமானதொரு முறையில் இணைந்து இயந்து இருப்பதை, மிதமிஞ்சிய உற்சாகத் துடன் அவள் எனக்கு எடுத்துச் சொல்லத் தொடங்கி னாள். பழக்கமில்லாத என் கண்களைக்கொண்டு, அந்த இயைபைக் காண முயன்று தோற்றேன்!

* * *

நடனப் பயிற்சியைக் கைவிடலாமா என்று நினைத் துக் கொண்டிருக்கிறேன். சில வாரங்களுக்கு முன்னர் தான் 'பால்-ரூம்' நடனத்தில் எனக்கும் பயிற்சி தொடங் கியது. அதை நினைத்தாலே எப்படியோ இருக்கிறது! நடுங்கிக்கொண்டே இருந்தேன். பலர் முன்னிலையில், இளம் பெண் ஒருத்தியின் கைகளைப் பிடித்துக்கொண்டு நடனமாடுவது என்றால், எனக்கு இதில் பழக்கமே யில்லை. அந்தப் பெண்ணின் புன்னகைக்கு மாறாக, என்னால் அசடு வழிய நிற்கத்தான் முடிந்தது! ஒரு நங்கையுடன் இருக்கிறோம் என்ற நினைவே, இசையைக் குலைத்தது. ஆசிரியர் சொன்ன எதுவுமே காதில் விழ வில்லை. எனக்கு நடனமாடக் கற்றுத்தரவேண்டு மென்று அந்தப் பெண் எவ்வளவோ முயன்றாள். அவ ளுடைய காலை நான் பலமுறை மிதித்ததுதான் கண்ட பலன்! எனக்கு அது வரவில்லை. இதன் பிறகு, என் னுடன் சேர்ந்து நடனமாடுவதில் அவளுக்கு விருப்ப மில்லை என்பதை அறியும் அளவுக்கு நான் புத்தி சாலியாயிருந்தேன். ஆகவே விடைபெற்றுக்கொண்டு வீடு வந்து சேர்ந்தேன். நடனப் பயிற்சி தொடங்கிய முதல் நாள் மாலை இப்படி முடிந்தது. இன்று மீண்டும் நாட்டியப் பாடம் கற்கப் போகவேண்டும். எனக்கென்

னவோ தயக்கமாயிருக்கிறது. ஆனால் என் அறை நண்பரோ, இந்தச் சிறிய தடைகளை யெல்லாம் கடக்காமல் எதையும் எப்படித்தான் கற்றுக்கொள்வது! என்று கேட்டார்.

* * *

இந்த இந்திய மாணவர்கள்தான் எவ்வளவு சத்தம் போடுகிறார்கள். இந்தக் கல்வி நிலையம் முழுவதிலும் அவர்கள் சிரிப்பு, அலை யெழுந்து பறக்கிறது. அவர்களது நடை வேகத்தில் கட்டிடமே குலுங்குகிறது. மேல் நாட்டு வாழ்க்கைக் கேற்ப நடந்துகொள்ள வேண்டும் என்ற நினைப்பில் அவர்கள் சில சமயம், மிகையாகவே நடந்துகொள்கிறார்கள். நடையுடை பாவனைகளில் மேல் நாட்டாரையும் மிஞ்சும் இந்தியர்களும் உண்டு. அதற்கு நேர்மாறாக, மது, மாமிசம், சிகரெட் முதலியவற்றிலிருந்து காததூரம் விலகியோடும் பழமைவாதிகளும் சிலர் இருக்கிறார்கள். பெண்களைப் பற்றிய பேச்சு எழுந்ததும் பற்றற்ற முனிவரைப்போல முகத்தை வைத்துக் கொள்வார்கள். இரண்டொரு கணத்திலேயே அது மாறி, ஒருவித வெட்கம் அவர்களைக் கவ்விக்கொள்ளும். இயல்பாக நடந்துகொள்ளும் சாதாரண இந்தியன் ஒருவனைக் காண்பதரிது. அப்படிப்பட்ட ஒருவரைக் காண வேண்டும் என்று நான் விரும்புகிறேன். ஆனால் அவர்கள் என் கண்களுக்குப் புலப்படமாட்டார்கள் போலத் தோன்றுகிறது!

நண்பர் அ.-வுக்குச் சுவைமிகுந்த பேச்சுக்களிலும், டாக்டர் ஜான்ஸனின் ஹாஸ்யப் பேச்சுகள்போன்றவற்றிலும் விருப்பம் அதிகம். அவர் ஆண்டுக்கொரு முறைதான், தமது பிரெஞ்சு ரகத் தாடியைக் கத்திரித்துக் கொள்வார்கள். நவீன ஓவியத்தின் விசேஷ நுணுக்

கம் போல அது காட்சியளிக்கும்; அதுவும் ஓரிரண்டு மாதங்களுக்குத்தான்.

நண்பர் ஆ. இருக்கிருரே அவர் ஒரு நடமாடும் கலைக் களஞ்சியம்! மிக அதிகமாக வளர்ந்த அவரது மூளையைக் கட்டிக் காக்க முடியாதுபோல, அவர் தலை மயிர் முன்புறம் சரிந்து, ஐன்ஸ்டைனைப் போன்றதொரு தோற்றத்தை அளிக்கும். சாப்பிடும் நேரமானுலும்சரி, விளையாடும் நேரமானுலும்சரி, எந்த நேரத்திலும் அவர் புத்தகமும் கையுமாகவே காட்சி கொடுப்பார். பல்வேறு நூல்களின் வடிவமே அவர் வடிவம்! ஒருவேளை, காதலி யுடன் பேச்சு நிகழ்த்தும்போதும் கூடப் பல்வேறு ஆசிரியர்களை மேற்கோள் காட்டுவாரோ என்னவோ?

நண்பர் க-வின் மென்மை, பார்ப்பவர்கள் மனத் தில் பரிதாபத்தையே உண்டாக்கும். நடையோ அன்ன நடை, பேச்சு, வசந்தகாலத்துத் தென்றல்போல அசைந்து ஒலிக்கும். நண்பர் க. தான் கவிதை; கவிதை யின் வடிவம்தான் அவர்!

ஆணவ மிகுந்தவர் என்று கருதப்பட்ட நண்பர் ச. உண்மையில் ஆணவ மற்றவரே. துறவியைப்போல அவர் நடிப்பது, உண்மையில் அவரது மனப் பதற் றத்தை மறைப்பதில்லை. இப்படி யெல்லாமிருந்தாலும் கூட அவர்கள் என் நண்பர்களே! பழகத்தக்க, அன்பு மிக்க, நல்ல நண்பர்கள்!

* * *

இன்று பிற்பகல், உறைபனி வானத்தைப் பொத் துக்கொண்டு பெய்தது. எனக்கு ஒரே மகிழ்ச்சி! தூய்மை யும் புனிதத் தன்மையும் நிறைந்த மல்லிகை மலர் போன்ற அந்தப் பனி பெய்தது, தேவதைகள் இந்த

உலகில் தமது கருணையைக் கவிழ்ப்பதுபோல் இருந்தது. பிற்பகலிலிருந்து நாங்கள் பனிப் பந்து விளையாடினோம். இந்தியாவின் "ஹோலி" பண்டிகை என் நினைவுக்கு வந்தது. அப்போது பலவித வண்ணப் பொடிகளை ஒருவர் மீதொருவர் வீசுவதைப்போல நாங்கள் வீசினோம்.

இந்த நாட்டில், வானில் தெளிவாக ஒளிவிடும் சந்திரனைக் காண்பது அரிது. இன்றிரவு இன்பம் மூட்டுவதாயிருக்கிறது. குளிரும் அவ்வளவாக இல்லை. ஆனால் ஏன் இதுபோன்ற விசித்திரமான எண்ணங்கள் என் மனத்தில் தோன்றுகின்றன? கீழ் நாடுகளுக்கும் மேலை நாடுகளுக்கும் இடையே ஏன் இந்த வேறுபாடு? வாழ்க்கைப்பற்றிய கருத்துக்களில் கூடவா வேறுபாடு இருக்க வேண்டும்? சில மணி நேரத்துக்கு முன்பு, ஒரு பெண்ணுடன் ஏரிக் கரையோரமாக, மெள்ள உலவிக் கொண்டிருந்தேன். "இந்த நிலவு எவ்வளவு அழகாய் இருக்கிறது!" என்று மெதுவாகக் கூறினேன். அவள், அலட்சியப் புன்னகையுடன் தலையை அசைத்துக் கொண்டே, ஏதேனும் ஒரு சிற்றுண்டிக் கடைக்குச் சென்று காப்பி சாப்பிடும்படி கூறினாள். வெட்டவெளி; தாரகைகள் நிறைந்த வானம்; உண்மையிலேயே இந்த இரவு மிகவும் இன்ப மூட்டுகிறது. நான் அந்தச் சூழ் நிலையை ரசித்துக் கொண்டிருந்தேன். "இதில் என்ன அழகிருக்கிறது?" என்று அவள் கேட்டாள். அதில் அவளுக்கு மகிழ்ச்சி யேற்படவில்லையாம். இதைக்கேட்டு நான் திடுக்கிட்டேன்; ஒருவகையில் ஏமாற்றமும்கூட! பிறகு ஒரு மணி நேரம் உணவு விடுதி யொன்றில் உட்கார்ந்து கழித்தோம். என் மனம் சரியாக இல்லை. திரைப்படங்களைப் பற்றியும், உடைகளைப் பற்றியும் தனது அமெரிக்க அநுபவங்களைப் பற்றியும் அவள்

கூறிய எதுவும் என் நினைவுக்கு எட்டவில்லை. என் மனம் வேறெங்கோ உலவிக்கொண்டிருந்தது. எண்ணத்திலே கூட நாம் யந்திரங்களாக மாறிவிட்டோம். இயற்கை யழகை ரசித்துப் புகழ்வதற்கு நமக்கு வாய்ப்பில்லை. கல்வியும் பண்பும் மிகுந்தவர்களாகத் தோன்றும் ஐரோப்பியப் பெண்களால் நிலவெளியின் இனிமையை அநுபவிக்க முடியவில்லையே, ஏன்? தொழில் வளப் பெருக்கமும், லோகாயதப் போக்கும்தான் இதற்குக் காரணமா? அவர்களின் தனித் தன்மையையும் உள் ளிருந் தெழும் உணர்ச்சி யூற்றையும் அவை நசுக்கி விட்டன போலும்! உயர்ந்து நிற்கும் கட்டிடங்களும், செல்வச் செழிப்பைக் காட்டும் தெருக்களும், கார்களும், நாடு முன்னேறி வருவதைக் காட்டுகின்றன. ஆனல் என் மனமோ, இந்த நாடுகள் உண்மையிலேயே முன் னேற்றமடைந்தவைதானு என்ற கேள்வியை அடுத் தடுத்து எழுப்புகிறது. வாழ்க்கையின் முக்கியமான அம்ச மொன்றை அவர்கள் இழந்துவிடவில்லையா? உலகின் பல நாடுகள்—மேலை நாடாயினும் சரி, கீழை நாடாயினும் சரி—இதே வழியைப் பின்பற்றி, அதே நிலைமையை எட்டியிருக்கின்றனவே! இதற்குத் தீர்வே இல்லையா?

* * *

சென்ற மாதத்தில், மேலும் பல மாணவர்கள் எங்கள் நிலையத்தில் சேர்ந்தார்கள். அவர்கள் பல்வேறு நாடு களைச் சேர்ந்தவர்கள். பல திறப்பட்ட பண்பாடுகளைக் கொண்டவர்கள். இத்தகையதொரு சர்வ தேசக் கூட் டத்தினிடையே வாழ்வது மிகவும் இன்ப மூட்டுகிறது. எத்தனையோ வேறுபாடுகள் இருந்தபோதிலும், அவர்கள் அனைவரும் நம்மைப் போலவே இருக் கிருர்கள்!

அனைவர்க்குமே பித்துப் பிடித்துவிட்டதோ? வேடிக்கையான முக மூடிகள், மாறு வேடங்கள்; நடனம்-குடி, களிப்பு-இரவு பகலாக. ஷேக்ஸ்பியர் கூறும் குடியர் கூட்டம் என் நினைவுக்கு வந்தது.

கட்டுப்பாடற்ற தொரு களிப்பு வெள்ளத்தில் நகரமே அமிழ்ந்து கிடந்தது. ஆம், கொகோனி நகரத்துப் புகழ் மிக்க களியாட்டு விழா அப்படித்தான் நடந்தது. நான் அங்கே இரண்டு நாட்கள்தான் தங்கினேன். அதற்கே போதும் போதும் என்று ஆகிவிட்டது. இந்த வேடிக்கையிலும் விளையாட்டுகளிலும் நான் கலந்து கொள்ளவில்லை. எவ்வளவு முயன்றும் என்னால் முடியவில்லை. அந்த உணர்ச்சியும் உற்சாகமும் எனக்கில்லை. பெரிய மாதா கோவில் ஒன்றின் படிகளில் அமர்ந்து, வியப்பும் ஆர்வமும் கண்களில் தேங்கப் பார்த்துக் கொண்டிருந்தேன். பல்வேறு நிறங்களைக்கொண்ட மக்கள் வந்து அங்கே கூடுவதை, வர்ணப் படம் பார்ப்பதைப் போல, பார்த்து ரசித்துக் கொண்டிருந்தேன்.

தேசீய ஒழுங்குக் கட்டுப்பாட்டுத் திட்டம்

இளைஞர்களிடையே பரவிக் காணப்படுகிற கட்டுப்பாடின்மையானது இந்நாட்டில் சமீப காலமாக எல்லாருக்குமே கவலையை உண்டாக்கியிருக்கிறது. அந்த கட்டுப்பாடின்மையானது. எதிர்ப்புணர்ச்சி, கல்வித்துறை அதிகாரிகளிடம் மரியாதைக் குறைவு. நேரிய வழியில் நடக்கவேண்டும் என்று தூண்டுதல் அல்லது லட்சியம் இல்லாதிருத்தல் ஆகிய பல்வேறு உருத்தில் வெளிப்படுகிறது.

அது ஒரோ தாற்காலிகமான ஒரு குறைப்பாடு; காலப்போக்கில் திருந்திவிடும் என்று சிலர் கருதுகிறார்கள்; ஆனால் அது ஓரளவுக்குந்தான் அப்படி. அதற்கு வேறு பல நிச்சயமான காரணங்கள் இருக்கின்றன; அவைகளை அகற்ற முடியும் என்று நிபுணர்கள் கூறுகிறார்கள்.

முதலாவதாக, ஆசிரியர்கள் போதுமானபடி தலைமை வகித்து நடத்த முடியாமலிருப்பதாகக் காணப்படுகிற நிலையைக் குறிப்பிடலாம். சொந்தப் பிரச்னைகளில் மூழ்கியிருக்கும் ஆசிரியர்களுக்கு மாணவரின் கல்விக்கு அடிப்படையாகத் தேவைப்படுகிற ஒரு "பிடிப்பு" இல்லை.

இரண்டாவதாக, மாணவர்களிடையே வளர்ந்து வருகிற வகுப்புவாத உணர்ச்சியானது அதைவிட மேலான தேசப் பற்றை அழித்துவிடுகிறது.

மூன்ருவதாக, அரசியல், பொருளாதாரப் பிரச்னைகளிலும் நிகழ்ச்சிகளிலும் மாணவர்களுக்கு ஏற்பட்டு வருகிற தீவிர அக்கறை.

அரசியல், பொருளாதாரப் பிரச்னைகள் பள்ளிக்கூடப் பாட விஷயங்களையும் விவாத விஷயங்களாக இருப்பதற்கு பதிலாக, வாழ்க்கைக்குத் தயாராக முயலும் தங்கள் செயலின் முழு அர்த்தத்தையும், பின் விளைவுகளையும் சிந்திக்காமல் ஈடுபடுகிற கிளர்ச்சிக்கும் காரணமாகிவிடுகிறது; வேறு சில காரணங்களும் இருக்கின்றன. தற்காலக் கல்வி முறையைப் பொதுவாக எல்லாரையும் "குமஸ்தாவாக்கும் கல்வி முறை" என்று கண்டனம் செய்வதும் இன்னொரு காரணமாக இருக்கலாம். ஏனென்ருல் அத்தகைய கண்டனம் இளைஞர்களின் மன ஊக்கத்தைக் கெடுத்துவிடுகிறது.

உயிர் துடிப்பும் ஜீவ சக்தியும் நிறைந்த இளைஞர்கள் குறைப்பாடுகளைத் தாங்களாகவே சரி செய்துவிட முயல்கிருர்கள் என்கிற ஓர் அம்சம் நமக்கு சந்தோஷமளிக்கிறது. இப்பிரச்னையை எப்படிச் சமாளிக்கலாம் என்பதற்கு அது நமக்கு ஒரு குறிப்பைக் காட்டுகிறது. இந்திய இளைஞர்களிடையே காணப்படுகிற அந்த சுயமுயற்சி மனப்பான்மையையும், சக்தியையும் ஊக்குவித்து அவற்றை நாட்டின் நல வேலைகளில் திருப்பிவிடவேண்டும்; சிறந்த பிரஜைகளாக்குவதற்கும், எதிர்காலத்தில் சிறந்த தலைமையை உருவாக்குவதற்கும் அவற்றைப் பயன்படுத்த வேண்டும்,

அதைத்தான் தேசீய ஒழுங்குக் கட்டுப்பாட்டுத்திட்டமும் செய்ய விரும்புகிறது. அதன் முதல் நோக்கம் உடற்பயிற்சியின் மூலம் சிறுவர்களைத் தகுதியுள்ளவர்

களாக்குவது, "வலுவான உடம்பில் தெம்பான மனத்தை ஏற்படுத்துவது" அதன் லட்சியம். ஒழுங்குக் கட்டுப் பாட்டுக்கு டிரில் விளையாட்டுகள், அணிவகுப்புகள் ஆட் டப் பந்தயங்கள் ஆகியவை மூலம் கிடைக்கிற உடற் பயிற்சி அடிப்படை அம்சமாகும். ஒழுங்குக் கட்டுப்பாட்டு பயிற்சி குழந்தைகளின் பள்ளி வாழ்க்கையில் முறையான ஒரு பகுதியாக இருக்கும். விடுமுறை காலத்திலும்கூட குழந்தைகள் உல்லாச யாத்திரை, சமுதாய வேலை ஆகியவற்றில் கலந்துகொள்ள ஊக்குவிக்கப் பெறுவர். அது அவர்களது சக்திக்கு உட்பட்ட வேலையாகவே இருக்கும். இந்தச் செயல் முறை வலுக்கட்டாயமாகி விடாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

குழந்தைகள் புரிந்து கொள்ளக்கூடிய விதத்தில், சொற்பொழிவுகள், யாத்திரைகள், நிதர்சனக் காட்சிகள் ஆகியவை மூலம் அவர்களுக்கு சகிப்புத் தன்மை நல்லுணர்வு, விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை ஆகி யவை ஏற்பட வழி செய்யப்பெறும். இதுதான் இந்த இயக்கத்தின் இரண்டாவது நோக்கமாகும்.

கூடுமானமட்டிலும் போதனசிரியர்களின் நேரடி போதனையைக் குறைத்து காட்சி, அனுபவங்கள் மூலம் குழந்தைக்ள், தாங்களே பல விஷயங்களையும் நேரடி யாய்த் தெரிந்து கொள்வதன் முக்கியத்துவம் எல்லா கட்டங்களிலும் வற்புறுத்தப் பெறும்.

இத்தகைய பயிற்சி மூலம், எதிர்காலப் பிரஜைகள் கட்டுத்தளை அதிகமில்லாத, மனவிலங்கில்லாமல், முரட் டுத்தனமோ, ஆதிக்கப்போக்கோ இல்லாமல், அதிக அளவுக்கு சகிப்புத் தன்மையும் நல்லுணர்வும் காட்டி தேசீய சேவை செய்யத் தகுதியுடையவர்களாக விளங்கு வார்கள்.

தேசீய ஒழுங்குக் கட்டுப்பாட்டுத் திட்டம் இப்பொழுது பஞ்சாப், பம்பாய், மேற்கு வங்காளம், டில்லி, மத்தியப் பிரதேசம், ஜம்மு-காஷ்மீர் இன்னும் உத்தரப் பிரதேசத்திலுள்ள சில பள்ளிக்கூடங்கள் ஆகியவற்றில் நடைபெற்று வருகின்றன. நடப்பு வருஷ முடிவுக்குள், இந்தத் திட்டம் நடைபெறுகிற பள்ளிகளின் எண்ணிக்கை 200 ஆகவும் அதனுல் பலனடைகிற மாணவர்களின் எண்ணிக்கை ஒரு லட்சத்துக்கு அதிகமாகவும் ஆகிவிடும். டில்லியில் மாளவியா நகரில் ஒன்றும், பாரிதாபாத்தில் ஒன்றுமாக இரண்டு பயிற்சி நிலையங்கள் போதனையாளர் பயிற்சிக்காக ஏற்படுத்தப் பெற்றுள்ளன. இப்பயிற்சி மூன்று மாதம் நடக்கும்; அந்நிலையத்தில் பயிற்சிபெற்று சுமார் 200 போதனையாளர்கள் இப்போது பல்வேறு இடங்களில் பணியாற்றி வருகிறுர்கள்.

இத்திட்டத்தை இந்தியா முழுவதிலும் சரியான முறையில் நிறைவேற்ற வேண்டுமென்றுல் ஏராளமான பணம் செலவாகும்; பிரம்மாண்டமான அளவில் வேலை செய்தாக வேண்டும்; ஆனுல் நான்கு வருஷத்தில் நடைபெற்றுள்ள முன்னேற்றத்தையும், அதன்மூலம், கிடைத்துள்ள நல்ல பலனையும் பார்க்கும்போது அத்திட்டம் இந்தியாவில் நிலையாக வேரூன்றி விட்டதென்றே சொல்லவேண்டும்; நல்ல முறையில் திடமாக அது வளரவும் செய்யும்.

கெட்ட பழக்கங்கள்

ஏ, ஆர். ஸ்டாடின்

நாம் பிறந்த நிமிஷத்திலிருந்தே நமக்குப் பழக்கங்கள் உண்டாகின்றன. அவை உண்டாவது சுலபம். ஒரு காரியத்தைக் கொஞ்சத் தடவை செய்தால், அது பழக்கமாய் விடுகிறது. தவிர, கெட்ட பழக்கங்கள் உண்டாவது எவ்வளவு சுலபமோ சரியாய், கணக்காய் அதே அளவு சுலபம்தான் நல்ல பழக்கங்கள் உண்டாவதும். அப்படி இருந்தும், நமது பழக்கங்கள் பெரும்பான்மையும் கெட்டவைகளாகவே இருக்கின்றன. இது மிகவும் வருந்தத் தக்கது. இந்தக் கட்டுரையிலே நமது தேக பலத்தையும் சுகத்தையும் கெடுத்து ஆயுளை குறுக்கும் சில சாதாரணப் பழக்க வழக்கங்களைப் பற்றிக் கொஞ்சம் சொல்ல விரும்புகிறேன். முதலாவதாக, சில கெடுதலான மனோ நிலைகளைப் பார்ப்போம். ஒரு வேளை எல்லாப் பழக்கங்களும் முதலிலே மனத்திலே தான் நினைவு வடிவங்களாகத் தொடங்கலாம். "நினைவைப் போலத்தான் மனிதன்" என்று பெரியவர்கள் சொல்லியிருக்கிறார்கள். எப்பொழுதும் மனச் சோர்வுடன் இருத்தல் மிகவும் கெடுதலான ஒரு பழக்கம். அதனால் தேக அவயவங்கள் அனைத்தும் சோர்வடைகின்றன. விசேஷமாக, இரைப்பை மந்தப்படுகிறது. நமது அவயவங்களிலே உணர்ச்சிகளால் மிகவும் சுலபமாகப் பாதிக்கப்படக் கூடியவைகளிலே இரைப்பையும் ஒன்று: துயரமான எண்ணங்களும் சோர்வும் பரபரப்

பும் நரம்புக் கிளர்ச்சியும் ஜீரணத்திற்கு இடையூறு பண்ணுகின்றன. நீங்கள் கவனித்திருப்பீர்கள். எப்போதாவது அதிகக் கவலையாக இருக்கும் சமயம் ஆகாரம் சாப்பிட்டால், வாயிலே எப்போதும் போல் எச்சில் ஊருது, ஆகாரத்தை விழுங்க முடியாது. இதற்கு என்ன காரணம் என்ருல், எச்சில் பைகள் மனச் சோர்விஞல் ஸ்தம்பித்து விடுகின்றன. அவசரப் பட்டுச் சாப்பிட்டாலும் இப்படி நடப்பதுண்டு. மனச் சோர்விஞல் ஆகாரத்திற்குப் பின் வயிற்றுவலிகூட உண்டாகும். இப்படிப் பட்டவர்கள் மற்றவர்களோடு சுமுகமாகப் பழகுவதும், தங்கள் வேலையிலேயே முன்னேறுவதும் அதிகக் கஷ்டம்.

ஒரு சிலர் எப்பொழுதும் துக்கமாக இருக்கிருர்கள். சோர்வான எண்ணம் தவிர, வேறெந்தவித எண்ணங்களையும் அவர்களால் எண்ண முடிவதில்லை. சதா ஆபத்தை எதிர்பார்த்தவண்ணம் இருக்கிருர்கள். இத்தகைய மஞேநிலை மிகவும் மோசமானது. இதைவிட, எவ்வளவோ நல்லது மனத்தைக் குதூகலமான எண்ணங்களால் நிரப்பிவைப்பது. அவை ஜீரணக் குழாய் முழுவதுக்கும் இதம் செய்கின்றன.

இனி, மனச் சோர்வைப் போலக் கலக்கம், பயம், கவலை, பரபரப்பு, ஆகிய உணர்ச்சிகளும் ஜீரணத்திலே பலமாகத் தாக்குகின்றன. அது போக, அட்ரெனலின் என்னும் நீரையும் நேரே இரத்தத்திற்குள்ளேயே கொட்டும்படி செய்கின்றன. இந்த நீர் இருதயத்தை அதிக வேகமாகத் துடிக்கச் செய்யும் வல்லமையுடையது. அதஞல் சில சமயங்களில் இரத்த அமுக்கம்கூட மிகவும் அதிகப்படுகிறது.

டாக்டர்கள் சில மனிதர்களுடைய இரைப் பைக்குள்ளே பார்த்திருக்கிறார்கள். இரைப் பையின் உட்புறம் நெடுகிலும் ஒரு மெல்லிய ஜவ்வு இருக்கிறது. அதிலே சந்தோஷம், சோர்வு, பயம், கோபம் ஆகிய உள்ளத்துணர்ச்சிகள் என்னென்னவித மாறுதல்களை உண்டாக்குகின்றன என்று டாக்டர்கள் கவனித்திருக்கிறார்கள். அவர்கள் கவனித்த ஒரு மனிதன் எவ்வளவோ காலமாக ஒரு குறிப்பிட்ட வீட்டை வாங்கவேண்டுமென்று யோசித்திருந்தான். ஆனால் திடீரென்று அவன் அதை வாங்க முடியாத ஒரு நிலைமை ஏற்பட்டது. அன்று டாக்டர்கள் வெகு ஆவலாக அவன் இரைப் பைக்குள்ளே பார்த்தார்கள். அங்கே சிற்சில இடங்களிலே இரத்தம் ஒழுகிக் கொண்டிருந்தது. அவன் அடைந்த ஏமாற்றத்தின் வேகம் இரைப்பையில் போய்ப் பலமாய் மோதியகாரணத்தால் இது உண்டானது. இப்படி வேறு அநேக சந்தர்ப்பங்களிலும் அவன் இரைப் பையிலே கனத்த இரத்த ஒழுக்கு உண்டாகக் கண்டார்கள்.

இன்னொரு கெட்ட பழக்கம் சதா விறைப்பாக இருத்தல். அநேகர் பகல் முழுவதும் முறுக்கிவிட்ட வீணைத் தந்திகளைப் போல விர்ரென இருக்கிறார்கள். இரவில் படுக்கப் போகும்போது கூட அவர்கள் கை முஷ்டித்துக் கொண்டிருக்கும்; பல் நறநறவெனக் கடிக்கும். இது பெரும்பாலும் உள்பயத்தினால் உண்டாவது. ஆனால் அது என்ன காரணத்தால் உண்டானாலும் சரி, அது உடம்புக்குக் கெடுதல் என்பதற்குச் சந்தேகம் இல்லை. அது தூக்கத்தை வரவொட்டாது தடுக்கும். தூக்கம் விட்டு விட்டு வரும். அல்லது சுக நித்திரையாக இருக்காது. எப்பொழுதும் விட்டாற்றியாக இருக்கப் பழக வேண்டும். உடம்பும் ஆறியிருக்க வேண்டும். மனமும் ஆறி யிருக்க வேண்டும். இது அதிகச் சிரமமல்ல.

விறைப்புக் கொள்ளும் தசைகளில் அநேகம் சித்தத்தின் ஆட்சிக்குட்பட்டவை. அவைகளைத் தளர்த்திவிட்டுக் கொள்ளலாம். கொஞ்சம் முயற்சி தான் தேவை,

விசேஷமாக வேலை செய்யும்போது மனம் ஆறி யிருக்க வேண்டும். அப்போது விகுவோ, ஆத்திரமோ, படபடப்போ, உக்கிரமோ, வேகமோ, முக்கல் முனகலோ ஆகாது. பிறரை முடுக்கவும் கூடாது. அதனால் தேக சக்தியும் நரம்புச் சக்தியும் தான் வீணாகின்றன. விரை வில் களைப்புத் தட்டும். உடல் தளர்ச்சி உண்டாகும். எப்போதும் நிதானமாக வேலை செய்ய வேண்டும். நிம் மதியாகச் செய்ய வேண்டும். உடம்பும் மனமும் மகிழ்ந் திருக்கும் நிலை தான் வேலை செய்வதற்கு ஏற்ற நிலை. ஒரு வேலையைச் செய்வதற்குத் தேவையான அளவு சக்திக்கு மேல் கொஞ்சமும் செலவழிக்கக் கூடாது. ஒவ் வொரு நாளும் காலையில் எழுந்தவுடனே, அன்று இன்னென்ன வேலை செய்யவேண்டும், இன்னவேலைக்கு இன்ன அளவு சக்தி செலவழிக்க வேண்டுமென்று திட்டம் போட்டுக் கொள்ளவேண்டும். தேக சக்தியைச் சேமித்து வைப்பதும் கடுமையான ஆயாசம் ஏற்படாமல் தடுப்பதும் அத்தியாவசியம்.

அநேகர் ஓய்வு ஒழிச்சல் இல்லாமல் வேலை செய் வதை ஒரு பெருமை என்று எண்ணிக்கொள்கிறார்கள். அது தப்பு. எந்த வேலையையும் "ஒரே மூச்சிலே" செய்துவிட முயலக் கூடாது. இடைக்கிடையே நின்று உடம்பையும் மனத்தையும் ஆற்றி விட்டுக்கொள்ள வேண்டும். கருமமே கண்ணான போதிலும், மெய்வருத்த மும் பார்க்க வேண்டும்.பசி நோக்கவேண்டும். கண் துஞ்ச வேண்டும். இதெல்லாம் அத்தியாவசியம். எப்பொழு தும் வேலை நினைவாகவே இருக்கக் கூடாது.

உங்கள் வேலை உங்களுக்குப் பிடிக்கவில்லை யானால் கூடிய சீக்கிரம் அதை விட்டுவிட்டு வேறு வேலை பாருங்கள். பிரியமில்லாததை உடம்பையும் மனத்தையும் வருத்திச் செய்து கொண்டிருக்கக்கூடாது. வேண்டா வெறுப்பு வேலை உடம்புக்குக் கெடுதி செய்யும்.

நமது உணவு விஷயத்திலும், நாம் அநேக தீய பழக்கங்களைப் பிடித்துக் கொண்டிருக்கிறோம். அவை களிலே ஒன்று உடம்புக்குத் தீங்கு செய்யும் உணவுகளை உண்ணுவதாகும். நல்லவைகளையும் கூடத் தீங்கான முறையில் உண்ணுகிறோம். பெருவாரியான ஜனங் களுக்கு என்ன ஆகாரம் சாப்பிட வேண்டு மென்று தெரிவதில்லை. பாமர ஜனங்களை விடுங்கள்; நன்றாகப் படித்தவர்களைப் பாருங்கள். பி. ஏ., எம். ஏ., என்று படித் திருக்கிறார்கள். இந்தப் பாடம் படிக்கவில்லை. பாடங் களிலெல்லாம் முக்கியமானது இந்தப் பாடம். இதைப் படிக்கவில்லை. எவ்வளவு ஆச்சரியம்! ஒருபோதும் அவசரமாகச் சாப்பிடக்கூடாது. அப்படிச் சாப்பிடுகிற போது, ஜீரண ரசங்கள் சரியாக ஊறமாட்டா. இரைப் பையும் உணவை நன்றாகத் தள்ளாது. ஜீரணம் முழு வதும் அதனால் பாதகமடையும். அவசரமாகச் சாப்பிடு வதைப் போல, ருசியில்லாத உணவுகளையும், நன்றாகத் தயாரிக்கப்படாத உணவுகளையும் சாப்பிடுவது கெடுத லாகும்.

இதைவிட மோசமானது காலந் தவருது உண்ணு மையாகும். அநேகர் ஒரு நாளைக்குப் பன்னிரண்டு மணிக்கும், மற்றொரு நாளைக்கு ஒரு மணிக்குமாகச் சாப் பிடுகிறார்கள். இடையில் நினைத்த நேரம் சிற்றுண்டி வேறு! கண்ட பட்சணங்களைச் சாப்பிடுகிறார்கள். முதலிலே சாப்பிட்ட ஆகாரம் இன்னும் இரைப்பைக்குள்

இருக்கும் போதே, மேலும் ஏதாவது சாப்பிட்டால். இரண்டாவதாகச் சாப்பிட்டது ஜீரணமாகும் வரையிலும் அது இரைப் பைக்குள்ளேயே தேங்கிக் கிடப்பதை டாக்டர்கள் பார்த்திருக்கிறார்கள். இதனால் இரைப்பை காலியாவதில் தாமதமும், ஆகாரத்திற்குப் பின் வயிற்று நோவும் உண்டாகின்றன.

இன்னும், மில்லில் அரைத்த தானியங்களையும், தானிய மாவுகளையும், வெள்ளைச் சர்க்கரையையும் அதிக மாகச் சாப்பிடுவதும் நல்லதல்ல. இந்தப் பதார்த்தங்கள் வயிற்றை என்னவோ நிரப்பலாம்; உடற் சூடு தரலாம். ஆனால், அவைகளிலே ஜீவாதாரச் சத்துக்களாகிய வைட மின்களும் உலோகப் பொருள்களும் இல்லை. இவைகளை மட்டும் சாப்பிட்டு ஆரோக்கியமாக இருக்க முடியாது. வைடமின்களும் உலோகப் பொருள்களும் வேண்டும். இவை பழம், கறிகாய்களில் அமோகமாக இருக்கின்றன.

இப்பொழுது கொஞ்ச காலமாக வைடமின் மாத் திரை சாப்பிடும் பழக்கம் எங்கும் பரவிக் கொண்டு வரு கிறது. இயற்கை வைடமின்களைப் போல இவை அவ் வளவாக உடம்பில் சேருமா என்பது இன்னும் திட்ட மாகத் தெரியவில்லை. தவிர, அவைகளின் விலையும் அதிகம்,

மற்றுமொரு கண்டிக்கத்தக்க பழக்கம் காப்பி, தேயிலை, புகையிலை, ஊறுகாய், மதுபானம் முதலியவை களை உபயோகித்தலாகும். இவை ஜீரணக் குழாயில் உறுத்தும் தன்மை யுடையவை. அப்படியே சர்க்கரையும், தித்திப்புப் பட்சணங்களும் அதிலே உறுத்தும். ஆகாரம் சாப்பிட்ட பிறகு பீடி, சுருட்டு, சிகரெட் பிடிப்பது மிகவும் கெடுதல். அதனால் ஜீரணம் சுந்தகப்படும். எப்படித் தெரியுமா? புகையிலை, இரத்தக் குழாய்களைச் சுருங்கச்

செய்யும் தன்மையுடையது. தேகத்தின் மற்றப் பாகங்களில் உள்ளவைகளைப் போல, இரைப் பை, குடல்களின் சுவர்களிலுள்ள நுண்ணிய குழாய்களையும் அது சுருங்கச் செய்கிறது. இந்தக் குழாய்களிலேதான் ஆகார சோஷணம் நடைபெறுகிறது. இரைப் பைக்கும் குடல்களுக்கும் தேவையான ஜீரண ரசங்களை உற்பத்தி செய்ய ஏராளமாக இரத்தம் தேவையாகும்.

அனேகர் நாள்தோறும் பேதி மருந்து சாப்பிடுகிறார்கள். அது என்ன வகையான மருந்தானாலும் சரி, அதனால் அதிகமாகவோ கொஞ்சமாகவோ, தீங்கு உண்டாகிறதென்பதில் ஐயமில்லை.

டானிக் விஷயமும் இப்படித்தான். அநேக டானிக்குகளில் 10 முதல் 30 சத விகிதம்வரை சாராயம் சேர்ந்திருக்கும். இந்த சாராயம் தான் மதுபானங்களிலுள்ள முக்கிய பாஷாணம். வெறி தருவது அது தான். சாதாரணமாக டானிக் சாப்பிட்டவுடனே அதிகப் பலம்வந்தது போலத் தோன்றுகிறதே, பலமா அது? வெறி, சாராயம் அப்படி ஏமாற்றுகிறது. ஜனங்களுக்கு இது தெரிவதில்லை. தூக்க மருந்து முதலியவைகளும் பொதுவாகக் கெடுதி செய்பவைதான். வைத்தியர் சொன்னாலொழிய, அவைகளை உபயோகிக்கக்கூடாது.

டாக்டர் ஸால்க்

44 வயது நிரம்பிய டாக்டர் ஜோனஸ் இ. ஸால்க், ஸால்க் வாக்ஸின் மருந்து கண்டு பிடித்தவர். குழந்தைகளின் உயிரை உறிஞ்சி வந்த இளம்பிள்ளை வாதத்திற்குச் சஞ்சீவி. அது இவருக்கு உலகப் புகழைத் தேடிக் கொடுத்திருக்கிறது.

ஸால்க்கின் மேதையை ஆரம்பத்திலேயே பெற்ருேர்கள் உணர்ந்திருந்தனர். தந்தை நியூயார்க் நகரில் உடுப்பு தைக்கும் தொழிலாளியாக இருந்தார். வருவாய் சொற்பம்தான். ஆயினும் மகனுக்குக் கூடுமானவரை ஊக்கமளித்து வந்தார். ஸால்க் தான் மூவரில் மூத்த மகன். 1914-ஆம் ஆண்டில் பிறந்தவர்.

பள்ளி ஆசிரியர்கள் வியக்கத்தக்க அறிவு படைத்திருந்தார் ஸ்ால்க். அவர் வாசிக்காத நல்ல புத்தகமில்லை என்று இளமையிலேயே பெயர் வாங்கி விட்டார்.

நியூயார்க் கல்லூரியில் 1934-ஆம் ஆண்டில் விஞ்ஞானப் பட்டமும் 1939-ஆம் ஆண்டில் நியூயார்க் பல்கலைக் கழகத்தில் வைத்தியத்தில் டாக்டர் பட்டமும் பெற்ருர்.

காதல் வலையிலும் டாக்டர் ஸால்க் சிக்காமல் இல்லை, தாம் காதலித்த டொன்ன லின்ட்ஸே என்ற பெண்ணை 1939-ஆம் ஆண்டில் மணந்தார். ஸால்க் தம்பதிகளுக்கு மூன்று பையன்கள் இருக்கிருர்கள்.

வைத்தியப் பட்டம் பெற்றபின் ஆஸ்பத்திரியில் கிருமி ஆராய்ச்சி வல்லுனராக ஆராய்ச்சிக்கூடத்தில் இரண்டு வருட ஆராய்ச்சி செய்தார். வேலே நேரத்திற்குப் பிறகும் கூட ஆராய்ச்சிக் கூடத்திலேயே தங்கி இருப்பாராம்.

மிச்சிகன் பல்கலைக் கழகத்தில் முழு நேர ஆராய்ச்சியாளர் பணியை மேற்கொண்டார். இன்புளூயென்ஸாவுக்கு வாக்ஸின் மருந்து கண்டுபிடிக்கும் பொறுப்பு இவரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. இதில் இவருடைய சாதனை அபாரம்.

1947-ஆம் ஆண்டில் பிட்ஸ்பர்க் பல்கலைக் கழகத்தில் வைரஸ் ஆராய்ச்சிக்கூடத்துக்கு டைரெக்டராக நியமனம்பெற்ருர். இங்குதான் இளம்பிள்ளை வாதத்தைத் தடுக்கும் மருந்து கண்டுபிடிக்கும் முயற்சி ஆரம்பமாயிற்று. எல்லா முயற்சிகளும் தோல்வியுற்றன.

இளம்பிள்ளை வாதம் மிகக் கொடிய நோய் : அமெரிக்காவில் முதன் முதலில் இது 1894-ஆம் ஆண்டில் தோன்றிற்று. 1955-ஆம் ஆண்டு வரை 57,000 பேருக்குக் கண்டிருக்கிறது. கொள்ளை நோயாக இருந்த ஓர் ஆண்டில் 3,300 பேர் மாண்டுபோயினர். அநேகமாகக் குழந்தைகளைப் பிடிக்கும் இந்த நோய் அவர்களின் உயிரை உறிஞ்சிவிடுகிறது அல்லது அவர்களை முடமாக்கி விடுகிறது.

இந்த நோயை ஒழிக்கும் ஆர்வம் டாக்டர் ஸால்க்கை பலமாகப் பற்றிக் கொண்டது. ஆனல் இந்த நோயில் எத்தனை ரகங்கள் இருக்கின்றன என்பது யாருக்கும் தெரியாது. கண்டுபிடிக்க பணச் செலவு அபாரமாகும்; நேரமும் அதிகமாகும்.

பண உதவி செய்ய, இளம்பிள்ளை வாதத்திற்கான தேசீய ஸ்தாபனம் முன் வந்தது. பொது மக்கள் நன் கொடைகளின் மூலம் இயங்குவது இந்த ஸ்தாபனம். இளம்பிள்ளை வாதம் பிடித்துள்ளவர்களிட மிருந்து ஆயிரக் கணக்கான மாதிரிகளை அவர்கள் ஆராய்ந்தனர். மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு மூன்று ரக இளம்பிள்ளை வாதம் இருப்பதாகக் கண்டு பிடித்தனர்.

இந்த மூன்று ரகத்தையும் எதிர்க்கக் கூடியதாக இருக்கவேண்டும் இவர்கள் கண்டு பிடிக்கும் வாக்ஸின். இதை ஓர் அறைகூவலாக ஏற்று டாக்டர் ஸால்க், இன்னும் இதர விஞ்ஞானிகள் ஆகியோர் அப் பணியை 1949-ஆம் ஆண்டில் முழு மூச்சுடன் மேற்கொண்டனர். வெற்றி காணப் பல ஆண்டுகள் கூடப் பிடிக்கலாம் என்பதை அவர்கள் உணராமல் இல்லை.

நாள் ஒன்றுக்கு 16 மணி நேரம், வாரத்திற்கு ஆறு நாள் வேலை செய்தார் டாக்டர் ஸால்க். வீட்டிற்கு வந்தாலும் கூட ஆராய்ச்சிக்கூடம்தான் நினைவு என்று தெரிவித்தார் அவருடைய மனைவி. இறுதியில் 1953-ஆம் ஆண்டில் அவர் கண்டு பிடித்த மருந்து மிருகங்களில் இளம்பிள்ளை வாதத்தைத் தடுத்தது. மனிதர்களுக்கு இது உபயோகப்படுமா?

தாம் கண்டு பிடித்த வாக்ஸினை, தம்மீதும் தம் குடும்பத்தினர் மீதும் ஊசிமூலம் செலுத்திப் பார்த்தார். விரோதமான விளைவுகள் ஏற்படவில்லை. அடுத்தபடியாக 5000 குழந்தைகளுக்கு ஊசி போடப்பட்டது. 1954-ஆம் ஆண்டில் லட்சம் குழந்தைகளுக்கு ஊசி போட்டனர்.

இன்று குழந்தைகள், வயது வந்தவர்கள் உள்பட ஏழு கோடி அமெரிக்கருக்குமேல் ஊசி போடப்பெற்றது.

இவர்களிடையே இளம்பிள்ளை வாதம் 90 சதவிகிதம் ஒழிந்து போயிற்று.

லாப நோக்கம் ஏதும் இல்லாத டாக்டர் ஸால்க் இந்த வாக்ஸினை உலகம் முழுவதற்கும் தாராளமாகத் தர முன்வந்துள்ளார். இது உலகம் முழுவதிலும் இந்த நோயை ஒழிக்க உதவி புரியும்.

வெற்றி கண்ட டாக்டர் ஸால்க் உறங்கச் செல்ல வில்லை.

இப்பொழுது இன்னொரு கொடிய நோயை ஒழிக்க கங்கணம் கட்டியுள்ளார். இதுதான் புற்றுநோய்.

மனிதனும் ஆட்டுக்குட்டியும்

மனிதனுடைய உயிரைவிட, ஆட்டுக் குட்டியின் உயிர் தாழ்ந்த தன்று.

—காந்தியடிகள்

புற்றுநோய்

புற்றுநோய் இருபதாம் நூற்றுண்டில் தோன்றிய புதிய நோயல்ல.பல நூற்ருண்டுகளுக்கு முன்பே தோன்றிய நோய்தான். ஆனல் தற்காலத்தில்தான் உலகில் பல பாகங்களில் இந்த நோய் பரவியிருக்கிறது. இது ஏன்? நாகரிகப் பழக்க வழக்கங்களும் நீண்ட ஆயுளும் இந்த நோய்க்குத் துணை நிற்கின்றன என்று கூறலாம். புற்றுநோய் இளைஞர்களைப் பற்றிக்கொள்வதில்லை. முதியவர்களையே தாக்குகிறது. நமது முன்னேர்களில் பலர் நோய் பற்றும் முதுமைப் பிராயத்தை எட்டுமுன்னே இறந்துவிட்டார்கள். மேலும் அந்தக் காலத்தில் பெனிஸிலின் போன்ற உயிர்காக்கும் விந்தை மருத்துகள் கண்டுபிடிக்கப்பெறவில்லை.

புற்று நோயில் பல வகையுண்டு. அவை தீராதவையல்ல. சுமார் நூறு ஆண்டுகளுக்கு முன்பு புற்று நோய் கண்டால் சாவு உறுதி என்ற நிலை இருந்தது. இன்றுள்ள நிலைமை வேறு. புற்று நோயை ஒழிக்கத் தீவிர முயற்சியிருக்கிறது. ஆராய்ச்சியின் பயனுக பல மருந்துகளும் வசதிகளும் கிடைத்துள. தொடக்க நிலையில் சிகிச்சையளித்தால் புற்று நோய் குணமடைந்துவிடும். வாயில் தோன்றும் புற்றுப் புண்ணுக்கு தொடக்க நிலையிலேயே சிகிச்சையளித்தால் பத்துக்கு எட்டு குணமாகிவிடும். முற்றிய நிலையில் சிகிச்சையளித்தால் 13 சத விகிதம்தான் குணமேற்படுகிறது. கருப்பைக்குழலில் தோன்றும் புற்றுப் புண்ணையும், உரிய சமயத்தில்

சிகிச்சையளிப்பதன் மூலம், குணப்படுத்திவிடமுடியும். முற்றிய நிலையிலும் பத்துக்கு ஒருவராவது பிழைத்து விடுவதுண்டு.

மான்செஸ்டரிலுள்ள கிறிஸ்டி வைத்தியசாலை புற்றுநோய் சிகிச்சைக்குப் புகழ்பெற்றது. இங்கு கருப் பையில் புண்ணுள்ள 2000 பேர்களுக்கு வைத்தியம் செய்ததில் 860 பேர்கள் குணமடைந்தார்கள், 700 பேர்கள் இறந்தார்கள். நோய்க் குறிகள் தோன்றி யதுமே டாக்டரை அணுகியிருந்தால் இந்த 700 பேர் களும் சாவுக்குத் தப்பியிருக்கலாம். கவனக் குறைவு, வேலைமிகுதி, வசதியின்மை இவைபோன்ற காரணங் களால் நோய் முற்றி விடுகிறது. பெண்களுக்கு இயல் பாகவுள்ள சகிப்புத்தன்மையே நோயை வளர்த்து விடுகிறது.

புற்றுநோய் ஒழிப்புப் பிரசாரத்தின் மூலம் பல உயிர் களைக் காக்கமுடியும். புற்றுநோய் உயிர்க்குடிக்கும் பயங் கர நோயல்ல. அதைக் குணப்படுத்திவிட முடியும். அறியாமையும் பீதியும் புற்று நோய்க்குத் துணைவர்கள் என்று வைத்திய நிபுணர்கள் கூறுகிறார்கள். ',மகிழ்ச்சி யுடன் வாழ்வோரை புற்று நோய் அணுகாது'' என்கிறார் பிரபல பிரிட்டிஷ் இரண வைத்தியர் ஸர். ஓகில்லி.

சத்திரம் வைத்தல் அணுக்கதிர் வீச்சு, மருந்து அளித்தல் என மூவகைகளில் புற்று நோய்க்குச் சிகிச்சை தரமுடியும். புற்றுநோய்க் கண்ணறைகள் உடலின் பல உறுப்புகளுக்குப் பரவக்கூடியவை. தொடக்க நிலையில் அவற்றைச் சேதித்து எறிந்து குணம் பெற முடியும். உதாரணமாக, கருப்பைக் குழலில் புற்றுப்புண் தோன்றி னால் அது பரவுமுன்பு கருப்பையை சேதித்துவிட்டால், உயிரைக் காத்துவிட முடியும்.

மருந்து - மூலிகைகள் முலம் சிகிச்சையளிப்பது தொடக்க நிலையில்தான் இருக்கிறது. உலகில் பல பாகங்களிலுள்ள வைத்திய விஞ்ஞானிகள் புதிய மருந்துகளைக் கண்டுபிடிக்கும் ஆராய்ச்சியிலீடுபட்டிருக்கிறார்கள்.

புற்றுநோய் சிகிச்சையில் அணுக்கதிர் வீச்சு முறை முக்கிய இடம் பெற்றுள்ளது. இந்த முறையினால் பலருக்கு நன்மை கிடைத்திருக்கிறது.

புற்றுநோய் சிகிச்சைக்கான ஆராய்ச்சி செய்யவும், வசதிகளைப் பரப்பவும், புதிய மருந்துகளைக் கண்டுபிடிக்கவும், 1923-ஆம் ஆண்டில் பிரிட்டிஷ் சாம்ராஜ்ய புற்றுநோய் ஒழிப்பு இயக்கம் நிறுவப்பெற்றது. சென்ற ஆண்டில் லண்டனில் நடந்த சர்வதேச புற்றுநோய் (ஒழிப்பு) காங்கிரஸ், இயக்கத்தின் வரலாற்றிலேயே ஓர் முக்கிய நிகழ்ச்சியாகும். இதில் உலகின் பல பாகங்களைச் சேர்ந்த 3000 வைத்தியர்களும் ஆராய்ச்சி நிபுணர்களும் கலந்து கொண்டார்கள்.

சென்ற ஆண்டில் பிரிட்டிஷ் சாம்ராஜ்ய புற்றுநோய் ஒழிப்பு இயக்க நிறுவனம் பிரிட்டனிலும் காமன்வெல்த்திலுமுள்ள ஆராய்ச்சிப் பணிக்காக எண்பது லட்சம் ரூபாய் வழங்கியிருக்கிறது.

லண்டனிலுள்ள புற்றுநோய் ஆராய்ச்சிக் கழகத்தின் ஓர் பிரிவான செஸ்டர் பெட்டி ஆராய்ச்சிக் கழகத்திற்கு முப்பது லட்சம் ரூபாய் செலவில் ஓர் கட்டிடம் கட்டத் திட்டமிட்டிருக்கிறார்கள்.

———

கடல்

எஸ். ஸ்ரீநிவாசன்

ஆழிசூழ் வையகம் என்று பூமியைக் குறிப்பிடுவதுண்டு. ஆழத்தைத் தன்மையாகவுடைய தாகையால் கடலுக்கு'ஆழி' என்ற காரணப் பெயர் அமைக்கப்பெற்றிருக்கிறது. வானும், கடலும் என்றுமே சிந்தனையைத் தூண்டி வந்திருக்கின்றன. உயரத்திற்கு வானத்தைக் காட்டியவர்கள் அடங்காத வன்மைக்குக் கடலைக் காட்டினர். 'சேணுயர் திருவேங்கடத்தை'ப் போற்றிய ஆழ்வார் 'காதல் கடலினும் பெரியது' என்றார். பரப்பிற்குக் கடலே சிறந்த உவமையாகக் கொண்டாடப்படுகிறது. 'கருணைக் கடல்' என்று வள்ளல் தன்மையைப் போற்றிக் கூறுதல் இலக்கிய மரபு. இவ்வாறான கடல் பூமியின் மேற்பரப்பில் எழுபது சதவிகிதம் சூழ்ந்திருக்கிறது.

கடல்களின் அமைப்பையும் தோற்றத்தையும் கொண்டு வெவ்வேறு பெயர்கள் இடப்பெற்றிருக்கின்றன. பெருங்கடல், கடல், விரிகுடா, குறுங்குடா, ஜலசந்தி எனப் பலதரப்பட்ட பெயர்கள் உண்டு. உலகப் பெருங்கடல்கள் முறையே இந்துப் பெருங்கடல், பசிபிக் பெருங்கடல், அட்லாண்டிக் பெருங்கடல், ஆர்க்டிக் கடல், அண்டார்டிக் கடல் என்பனவாம். நம் நாட்டில் கிழக்கே வங்காளக்குடாக் கடலும், மேற்கே அரபிக் கடலும், தெற்கே இந்துப் பெருங்கடலும் உள்ளன.

கடல்களின் மொத்தப் பரப்பு 14 கோடி சதுர மைல். மிக்க ஆழமான பாகம் 35400 அடி. எவரெஸ்டு சிகரத்தையே, முடிந்தால், கடலில் மூழ்கடிக்கலாம். இத்துணை ஆழமான பாகம் பசிபிக் பெருங் கடலில் பிலிப்பைன் தீவுகளுக்கு அருகே இருப்பதாகக் கண்டிருக்கின்றனர். அதே போன்று மற்ருெரு இடம் ஜப்பான் தீவுகளுக்கு அருகே இருக்கிறது. அதற்கு 'டஸ்கரோரா பள்ளம்' (Tuscarora Trench) என்று பெயர்.

கடல் நிறமுடையதாக யிருப்பதேன்? கடல்நீர் சில இடங்களில் நீலமாயும், மற்றும் சில இடங்களில் பச்சையாயும் இருக்கிறது. வேறு சில இடங்களில் பசும் பழுப்பு நிறமாக இருக்கிறது. கடல் நீரில் மிதக்கும் மிகச் சிறிய அணுக்களில் ஒளிப்பட்டுச் சிதறுவதால் நீல நிறம் தோன்றுகிறது. அங்கக அணுக்களில் பட்டுச் சிதறுவதால் பச்சையாகத் தோன்றுகிறது. 'ஆல்கா' என்ற தாவர இனங்கள் நிறைந்த இடங்களில் கடல் நிறம் சிவப்பாகத் தோன்றுகிறது. நீல வானத்தைப் பிரதிபலித்தலால் கடல் நீல நிறம் காட்டுவதாகக் கூறலாம்.

கடல் நீர் உவர்ப்பாகி இருப்பது எல்லோருக்கும் தெரியும். ஒரு காலன் கடல் நீரிலிருந்து கால் ராத்தல் உப்புக் கிடைக்கும். சாதா உப்புத் தவிர வேறு சில தாதுக்களும் கடல் நீரில் இருக்கின்றன. பொட்டாசியம், மக்னீசியம், வெள்ளி முதலியன கடல் நீரில் இருக்கின்றன. ஆறுகள் கடலுக்குக் கொண்டுவரும் பொருட்களில் பெரும்பகுதி உப்புக்கள். ஆகவே, கடல் நீர் உப்புக்குக் குறைவின்றி இருக்கிறது. மேலும் கடல்களில் நீரோட்டம் இல்லாமல் இருந்தால் அவற்றில் உப்பு மிக்க அதிகமாக இருக்கும். அவற்றை உள்நாட்டுக் கடல் என்பர். உதாரணமாக 'சாவுக் கடல்' (Dead Sea)

கடற் காளானின் சாம்பறிரிருந்து அயோடின் என்ற இரசாயனப் பொருளை எடுக்கின்றனர்.

கடல் சூழ்ந்திருப்பதால் பூமிக்குப் பல நன்மைகள் உண்டு. சூரிய வெப்பத்தின் பெரும் பகுதியைக் கடல் எடுத்துக் கொள்கிறது; வெப்ப, தட்பங்கள் கடல் நீரோட்டங்களால் பரப்பப்படுகிறது. கடல்கள் இல்லையானல் மழையேது? கடல் வாழ் மீன் இனங்கள் உலகத்தின் பெரும்பகுதி மக்களுக்கு உணவாகின்றன. இவைகள் எம்முறையில் நிகழுகின்றன என்பதை இங்கு நோக்குவோம்.

பகவான் நம்மேல் வீசும் கதிர்களின் வெம்மையை, நம்மைச் சூழ்ந்திருக்கும் காற்றடுக்கு ஓரளவு குறைக்கிறது. இருந்தும் மிகுதியான வெப்பம் பூமியை வந்தடைகிறது. அத்துணை வெப்பத்தையும் பூமி முழுவதும் நிலப்பரப்பிலிருந்து பெறுவதாயிருந்தால், உயிரினம் வாழ முடியாத அளவிற்குத் தரை சூடு கொண்டுவிடும். ஆனல் பூமியைச் சூழ்ந்த கடல் நீர் அதிக அளவு வெம்மையை எடுத்துக் கொள்கிறது. அதிகமான வெம்மையைத்தாங்கும் சக்தி நீருக்கு உண்டு. உண்மையில், வேறு எப்பொருளுக்கும், நீரைப்போல் அவ்வளவு வெம்மையைப் பெறும் சக்தி இல்லை. விளக்கமாகக் கூறின் மிக்க அதிக வெப்பத்தைக் கொண்டு சிறிதளவே வெப்ப நிலை உயரும் தன்மை நீருக்கு உண்டு. ஆகையால் பூமியை சூரிய வெப்பத்தினின்று காக்கும் மற்றொரு கேடயமாகக் கடலைக் கருதலாமல்லவா !

கடல் காற்றின் சுகத்தை அறியக் கடற்கரையில் வாழ்பவர்களைக் கேட்டாலே போதும். அதை நாடி, மாலை வேளைகளில், கடற்கரைக்குச் செல்லுவோரின் எண்ணிக்கை அனந்தம். சென்னை நகரின் கவர்ச்சிக்கும்

எழிலுக்கும் காரணமாயிருப்பது 'மரீனு' கடற்கரை யல்லவா? பகலில் தரைவேகமாகச் சூடுகொண்டு விடுவதால் அதன் மேலுள்ள காற்றும் சூடாகி இலேசாவதால் உயர எழுகிறது. அப்பொழுது கடல் பரப்புக் குளிர்ச்சி யாயிருப்பதால் குளிர்ந்த கடற் காற்று நிலத்தை நோக்கி வீசுகிறது. இரவு நேரங்களில் நிலம் விரைவில் குளிர்ந்து, கடல் நீர் சூடாக இருக்கும். அப்பொழுது கடலின் மேலுள்ள காற்று உயர எழுந்து நிலத்திலிருந்து காற்று கடலை நோக்கி வீசும். ஆகையால் கடற்கரை நகரங்கள் உள்நாட்டு நகரங்களைவிட வெப்ப தட்ப ஏற்றத் தாழ்வு அதிகமில்லாமலிருக்கும்.

மழை சூரியனைத் தொடருகிறது என்பார்கள். பொதுவாக உலகத்தின் பெரும்பாகம் கோடையில்தான் மழையைப் பெறுகிறது. காரணம், சூரியன் தலைக்கு நேராகப் பிரகாசிக்கும் மாதங்களில் நிலம் மிக வெப்ப மடைந்து, அதன் மேலுள்ள காற்று விரிந்து இலேசாகி அழுத்தம் குறைந்து உயர எழும்பொழுது, சூரியனின் சாய்ந்த கிரணமே விழும் பகுதியிலிருந்து குளிர்ந்த இறுகிய காற்று, அழுத்தம் குறைந்த இடத்தை நோக்கி வீசும். கடல்களைத் தாண்டி இக் காற்றுகள் வரும்போது அதிகமான நீராவியைச் சுமந்து வருவதால் மழையை அளிக்கின்றன.

கடல்களில் நிரந்தரமான நீரோட்டங்கள் உண்டு. சில உஷ்ணமாயும், சில குளிர்ந்ததாயும் இருக்கும். கடல்கள் ஒரே வெப்ப நிலைமையில் இருப்பதில்லை. ஆகவே கடல் நீரோட்டங்கள் ஏற்பட்டிருக்கின்றன. 'கல்ப்ஸ்ட்ரீம்' என்ற வெப்ப நீரோட்டம் 95 மைல் அகலமும் ஒரு மைல் ஆழமும் உடையது. அது மெக்சிகோ வளைகுடாவில் கிளம்பி வடகிழக்காகச் சென்று நியுபௌண்டு

லண்டுக்கு அருகே 'லாப்ரடார்' குளிர் நீரோட்டத்தைச் சந்திக்கிறது. அங்கு அதிக மூடுபனி உண்டாகும். குளிர்மிக்க ஆர்டிக் கடலிலிருந்துவரும் குளிர் நீரோட்டம் பெரிய பனி மலைகளை (Icebergs) யும் தள்ளிக் கொண்டு வருவதுண்டு. பனிமலையின் ஒன்பதில் ஒருபாகமே மேலே தெரியும், கனத்த மூடுபனியில் இப்பனி மலைகள் இருப்பது புலனாகாமல் கப்பல்கள் அவற்றில் மோதி பலியாகி விடுவதுண்டு. 1910-ஆம் ஆண்டு 'டைடேனியா' என்ற பெரிய கப்பல் ஒன்று பனிமலையில் மோதி மூழ்கியது உலகப் பிரசித்தம். கல்ப்ஸ்ட்ரீம் வெப்ப நீரோட்டம் வடக்கிழக்காகவே ஐரோப்பியக் கடற்கரையை அடைகிறது. அது அடித்துச் செல்லும் காளான் முதலியன அட்லாண்டிக் கடலில் கப்பல்களுக்கு மிக்கத் தடங்கல் விளைவிப்பதுண்டு. பசிபிக் கடலில் உள்ள வெப்ப நீரோட்டம் ஒன்று பிலிப்பைன் தீவுகளைத்தாண்டி ஜப்பான் தீவுகளைச் சுற்றி வருகிறது. பிறகு வடக்காகச் சென்று குளிர்ந்த பேரிங் நீரோட்டத்தைச் சந்திக்கிறது. இது குளிர்ந்த நீரோட்டமாக அலாஸ்காவரை சென்று தென்திசையில் கலிபோர்னியாக்கடற்கரையோரமாகச் செல்லுகிறது. தென் அமெரிக்காவின் மேற்குக் கடற்கரையோரமாக 'ஹம்போல்ட்' குளிர் நீரோட்டம் செல்லுகிறது.

இம் மாதிரி கடல் நீரோட்டங்கள் கண்டம் அல்லது தீவுகளின் வெப்ப தட்ப நிலைமையையும், ஆகவே வாழ்க்கையையும் பெரிதும் பாதிக்கின்றன. வடமேற்கு ஐரோப்பிய நாடுகள், பிரிட்டிஷ் தீவுகள் முதலியவற்றின் மிதமான வெப்ப தட்ப நிலைமைக்கும் கடல்கள் உறையாமலிருப்பதற்கும் 'கல்ப்ஸ்ட்ரீம்' வெப்ப நீரோட்டமே காரணமாகும். இந் நீரோட்டம் இங்கிலாந்தின் தெற்கே இரு பிரிவாகப் பிரிந்து ஒன்று இங்கிலீஷ் கால்வாய்

வழியாக வடகடலைத் தாண்டி ஸ்காண்டிநேவியாவின் மேற்குக் கடற்கரைக்குச் செல்லுகிறது. மற்ற பிரிவு ஐரிஷ் கடல் வழியாக வடக்காகச் சென்று முன் பிரிவோடு இணைகிறது. இவை காரணமாகக் கடல்கள் உறைவதில்லை. துறைமுகங்கள் ஆண்டு முழுவதும் போக்குவரத்துக்குப் பயன்படுகின்றன. குளிர்ந்த காற்று வீசுவதால் மக்கள் அதிக நேரம் களைப்படையாமல் வேலை செய்ய இயலுகிறது. ஜப்பான் தீவுகளும் இதே போன்று வெப்ப நீரோட்டத்தால் மிதமான வெப்ப தட்ப நிலைமையைப் பெற்றுள்ளன.

இந் நீரோட்டங்களால் மீன் திட்டுக்கள் அமைகின்றன. நியுபௌண்டுலண்டுக்கு அருகேயுள்ள 'கிராண்டு பாங்க்ஸ்' (Grand Banks)ம், வட கடலில் உள்ள 'டாக்கர் பாங்க்ஸ்' (Dogger Banks)ம் மீன் பிடித்தலுக்கு உலகப் புகழ் பெற்றவை. ஜப்பானியக் கடல்களும் மிக்க மீன்வளம் உள்ளவை.

கடற்கரை குறுகலாகவும், கடற்கரையில் செங்குத்தான உயரமான மலைகளும் இருந்து அருவிகள் கடல் வந்தடைந்தால் அங்கு கடற் பிளவுகள் (Fiord) தோன்றுகின்றன. அருவிகள் விழுவதால் இங்கு நீர் உவர்ப்பின்றி இருக்கும். இங்கு மீன்கள் அதிகம் வாழ்கின்றன. ஸ்காண்டிநேவியா, பிரிட்டிஷ் கொலம்பியா, நியுஸிலாந்து முதலிய இடங்களில் இம்மாதிரி அமைப்புக்கள் உள்ளன. அங்கு சாமன், தாட், ஹெர்ரிங் முதலிய மீன்கள் அதிகம். ஆகவே இவ்வாறான இடங்களில் மீன்பிடிக்கும் தொழில் விரிவாக நடைபெறுகிறது. மற்றோர் அமைப்பு 'உப்பங்கழி'கள் (Backwater) ஆகும். அது மலபார்க் கடற்கரைக்கே தனி உரிமை யுடையது. தென்மேற்குப் பருவக் காற்று மேற்குத் தொடர்ச்சி மலை

யில் மோதிப் பொழியும் மழையால் அருவிகள் உண்டாகி அரபிக் கடல் நோக்கி மண்ணையும் கல்லையும் அடித்துச் செல்லுகின்றன. அதே சமயத்தில் கடலும் கொந்தளிப்பு உடையதாயிருப்பதால் பெரிய அலைகள் எழும்பிக் கரையை நோக்கி அடிக்கின்றன; அருவிகள் கொணரும் மண்ணும் மணலும் சிறிய திட்டுக்களாக (Sandbras) கரையோரமாக ஒதுக்கப்படுவதால், கரைக்கும், மணல் திட்டுக்கும் நடுவே நீர்த்தேக்கம் ஏற்பட்டிருக்கின்றன. இவையே உப்பங்கழிகள் (Backwaters) எனப்படும். இவை உள்நாட்டுப் போக்குவரத்துக்கு மிகவும் பயன் படுகின்றன.

கடல் என்றால் அலை இல்லாமல் இருக்குமா? அலைகள் எவ்வாறு தோன்றுகின்றன. இந்தத் திவலைகள் காற்றினால் உந்தி எழுப்பப்படுகின்றன. அலைகள் மேலும் கீழும் நகர்ந்தாலும் நீர்த் திவலைகள் தொலைவுக்குச் செல்வதில்லை. அலையின் பாதையில் நீரோட்டங்களும் கூடிவிட்டால் பயங்கரமான அலைகள் உண்டாகும். சில அலைகள் நூறு அடிக்கு மேலும் எழுவதுண்டு. கரை அருகிலேதான் அலைகள் அதிக அழிவை உண்டாக்குகின்றன. மலைகளைப் பிளந்து, கரைகளை அரித்து மணல் திட்டு அல்லது தீவுகளை உண்டாக்கும்; புயலினாலும், கடலடியில் ஏற்படும் பூமி அதிர்ச்சியாலும் கடுமையான அலைகள் எழுவதுண்டு, கடலடியில் ஏற்படும் ஓட்டங்கள் கடல் வாழ்ப் பிராணிகளின் வாழ்க்கையைப் பெரிதும் பாதிக்கும்.

கடலின் அடித்தளத்தை அடைய முடியுமா? முடியாது. காரணம், கடலின் ஆழம் அதிகரிக்க அதிகரிக்க நீரின் பளுவினால் அழுத்தம் அதிகரிக்கும். ஒரு கன அடி நீர் 62½ ராத்தல் என்பதை நினைவிற்கொள்ளவேண்டும்.

உதாரணமாக, கடலின் ஆழமான பாகத்திற்கு உஷ்ண மானியைக் கொண்டு சென்ருல் நீர் அழுத்தத்தினுல், அது நொறுங்கிவிடும். ஆயிரம் அடிக்குக் கீழே ஒரே இருட்டாயிருக்கும். கடலில் மனிதன் மூழ்கிய அதிக ஆழம் 4500 அடிதான். 1934-ஆம் ஆண்டில் வில்லியம் பீப், (William Beebe) ஓடிஸ் பார்ட்டன் (Otis Barton) என்ற இருவரும் 'Bathpsphere' என்ற நீர் மூழ்கிக் கூண்டில் 3028 அடி ஆழம் மூழ்கினர். 1949-ஆம் ஆண்டில் பார்ட்டன் மட்டும் தனியே 4500 அடி ஆழம் வரை சென்ருர். மிக்க ஆழமான இடங்களில் தாவரங்கள் வளராது. அங்கு இறைச்சி யுண்ணும் பிராணிகளே வசிக்கும். அங்குள்ள இருட்டில் வழி தெரியச் சில மீன்கள் விளக்குகளைப் பெற்றிருக்கின்றன; வேறு சில ஒளியுள்ள ஒரு திரவத்தை நீரில் வெளியிட்டு வழியைக் கண்டு கொள்கின்றன.

கடலின் அடித்தளம் சமமாக இல்லை. அங்கு மலைகளும், பள்ளத்தாக்குகளும் இருக்கின்றன. சில இடங்களில் கடலடிக் கணவாய்கள்கூட இருப்பதாகக் கண்டிருக்கின்றனர்.

பூமியின் மேற்பரப்பில் இத்துணை ஆழமும் பரப்புமுள்ள கடல் நீர் பூமி சுழலும்கால் வான வெளியில் கொட்டிவிடாதது விந்தையாக இருக்கிறதல்லவா ? கடல்கள் அளவில் ஆழமே யானுலும், பூமியின் வடிவோடு ஒப்பிட்டால் கடலின் ஆழம் கணிசமாகத் தோன்ருது. பூமியளவில் கடல் நீர் சிமெண்டுத் தரையைக் கழுவி விட்ட பிறகு நிற்கும் நீரளவே எனக் கொள்ளலாம். மேலும் பூமி சுழலும் வேகத்தில் நீர் கொட்டாமலிருப்பது ஆச்சரியமல்லவே !

கடலடிப் படிவுகள் இயற்கையின் லீலைகளை அறிய ஓரளவு துணையாக இருக்கின்றன. சில இடத்திலுள்ளவை நீர் மட்டத்திற்கு மேலிருந்த மலைகள் சிதைவுற்றதால் ஏற்பட்டவை. வேறு சில இடங்களிலுள்ளவை நில அதிர்ச்சியின் பயனாக விளைந்த இடிதுகள்கள். பிறிதோர் இடத்தில் கடல் வாழ்ப் பிராணிகள் சிதைந்து அவற்றின் எலும்புக் கூட்டால் ஆனவை. மற்றும் அசேதனப் படிவுகளும், மலைகளில் கடல் நீரின் இரசாயன விளைவால் தோன்றிய பொருள்களும் காணப்படுகின்றன. இவற்றை ஆராய்ந்து பூமியின் வயதையும், பூமியின்மேல் நிகழ்ந்துள்ள நிகழ்ச்சிகளையும் ஊகிக்க இயலுகிறது.

வான வெளியை ஆராய முற்பட்டிருக்கும் மனிதன், நம்மைச் சூழ்ந்த கடலைப் போதிய அளவு ஆராயவில்லை என்பது விந்தையே.

புத்தரிடம் காணும் அழகு

சுவாமி விவேகாநந்தர்

[சுவாமி விவேகாநந்தர் அமெரிக்காவில் டிட்ராய்ட் நகரில் நிகழ்த்திய உரையின் ஒரு பகுதி]

ஒவ்வொரு மதத்திலும், விசேஷமான ஓர் தனி முறையில் ஆத்ம பக்தி வளர்க்கப் பெறுகிறது. ஆசையின்றி உழைக்கும் ஓர் முறையை மிக உன்னதமாய் புத்த சமயம் வளர்த்திருக்கிறது.

புத்த சமயத்தையும் பிராமண மதத்தையும் ஒன்றையொன்றெனக் குழம்பி மயங்காதீர்கள். எங்களுடைய சமயப் பிரிவுகளுக்குள்ளே ஒன்றுதான் புத்த சமயம். கௌதமர் என்ற பெரியார் அதை ஸ்தாபித்தார். அவரது காலத்தில் வறட்டுத் தர்க்கங்களும், வீண் சடங்குகளும் மல்கியிருந்தன; அவற்றையும், ஜாதிப் பிரிவினைகளையும் கண்டு அவருக்கு வெறுப்பு உண்டாயிற்று. சிலர் தாங்கள் ஒரு தொழிலுக்கென்றே பிறந்ததாகவும், அதனால் அப்படிப் பிறவாத மற்றோரினும் தாங்கள் உயர்ந்தோரென்றும் சொல்லிக் கொண்டதும், புரோகிதர்களையும் கௌதமருக்குப் பிடிக்கவில்லை.

ஆசையற்ற ஓர் மதத்தைப் புத்தர் போதித்தார். கடவுளைப் பற்றிய தர்க்கங்கள், சித்தாந்தங்கள் சம்பந்தப்பட்ட மட்டில். அவருக்குச் சிறிதும் கவலையில்லை.

"கடவுள் இருக்கிருரா" என்று சிலர் அவரை அடிக்கடி வினவினுர்கள்.

"எனக்குத் தெரியாது" என்று பதிலளித்து விட்டார்.

"சரியான நடத்தை எது ?" என்று கேட்டார்கள்.

"நன்மையையே செய்து, நல்லோனு யிருப்பது தான்" என்று கூறினுர்.

ஒரு சமயம் அவரிடம் ஐந்து பிராமணர்கள் வந்தார்கள். அவர்களில் ஒருவர், "சுவாமி, கடவுள் இன்னின்ன விதமாக இருப்பதாகவும் அவரை இன்ன வழியில் அடையலாம் என்றும் என் கிரந்தங்கள் கூறுகின்றன" என்ருர்.

மற்ருெருவர், "அது தப்பு. என் புத்தகங்களோ இன்னின்னபடி கடவுள் இருப்பதாகவும், இன்ன வழியில் அவரை அடையலா மென்றும் கூறுகிறது" என்ருர். மற்றவர்களும் இதே மாதிரியே சொன்னுர்கள். அவர்கள் கூறியனதயெல்லாம் புத்தர், மிக அமைதியாய்க் கேட்டுக் கொண்டிருந்தார்.

"இதெல்லாம் இருக்கட்டும்; கடவுளுக்குக் கோபம் வருமென்ருே, அவர் யாருக்கேனும் தீங்கு புரிகிருர் என்ருே, கடவுள் பரிசுத்தம் இல்லாதவர் என்ருே உங்களில் யாருடைய நூல்களேனும் சொல்லுகின்றனவோ ?" என்ருர் புத்தர்.

"இல்லை சுவாமி, கடவுள் தூயவர், நல்லவர் என்றே அவை யாவும் கூறுகின்றன." என்று அவர்கள் பதில் உரைத்தார்கள்.

"அப்படியானுல் என் நண்பர்களே! கடவுளின் சொரூபத்தைக் கண்டு கொள்ள வேண்டுமானுல்,

முதலிலே நீங்கள் ஏன் தூய்மையடையலாகாது ?' நல்லோராக லாகாது'' என்று கேட்டார் புத்தர்.

அவரது வேதாந்தம் பூராவையும் நான் ஆதரிக்க வில்லை யென்பது உண்மை. எனக்கே கடவுளைப் பற்றிய தர்க்க சித்தாந்தங்கள் எல்லாம் நிறைய வேண்டியிருக் கின்றன. அவரிடமிருந்து, அநேக விஷயங்களில் நான் அடியோடு மாறுபடுகிறேன். ஆனால், அவருடன் நான் மாறுபடுகிறேன் என்பதற்காக அந்த மகானிடம் காணப் படும் குண அழகை நான் பார்க்கக்கூடாதா ? ஆசை எள்ளளவுமில்லாத ஒரே மனிதர் அவர்தான். வேறு பல மகான்கள் இருந்திருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் தாங்கள் கடவுளின் திரு அவதாரங்கள் என்றும், தங்களை நம்பினோர் மோட்ச சாம்ராஜ்யத்தை அடைவார்கள் என்றும் கூறினார்கள். ஆனால் மூச்சுப் போகும் நிலை யிலும் கூட புத்தர் என்ன சொன்னார் ?

,'உங்களுக்கு யாரும் உதவமாட்டார்கள்; உங்களுக்கு நீங்கள்தான் உதவிக் கொள்ளவேண்டும்; உங்கள் விமோசனத்தை நீங்களே உழைத்துச் சம்பாதித்துக் கொள்ளுங்கள் " என்று சொன்னார் புத்தர்.

"புத்தர் என்றால், எல்லையற்ற வான வெளியைப் போல் எல்லையற்ற ஞானமாகும்: கௌதமனாகிய நான் அந்த நிலையை அடைந்து விட்டேன். நீங்களும் உழைத் தால், நீங்கள் அனைவருமே அந்த நிலையை அடை யலாம்'' என்றும் புத்தர் கூறினார்.

ஆசையே அடியோடு இல்லாதவராதலால், மோட் சம் செல்ல அவர் விரும்பவில்லை; பணத்தை விரும்ப வில்லை; தமது பட்டத்தையும் பிறபோகங்களையும் துறந் தார்; இந்தியத் தெருக்களிலே பிச்சை யெடுத்து புசித்

துக் கொண்டு, கடலெனப் பரந்த கருணை உள்ளத்தோடு மனிதருக்கும் உயிர்ப் பிராணிகளுக்கும் நலமே புரியுங்கள் என்று உபதேசம் செய்து கொண்டு திரிந்தார். விலங்கினங்களுக்காக, யாகப் பலி ஒன்றை நிறுத்துவதற்காக, தம் உயிரையே தியாகம் செய்ய வந்த ஒரே மனிதர் அவர்தான்,

"ஓர் ஆட்டுக் குட்டியைப் பலி கொடுப்பது, நீ மோட்சத்துக்குச் செல்ல உதவி புரியும் என்ருல், ஒரு மனிதனைப் பலி கொடுப்பது உனக்கு இன்னும் அதிக உதவியைப் புரியும்; ஆதலால் என்னைப் பலியிடு" என்று புத்தர் ஒரு மன்னனிடம் கூறினர். மன்னன் பிரமித்து விட்டான். ஆயினும், இந்த மனிதரிடம் எவ்வித ஆசையும் கிடையாது. கர்ம வீரர்களின் பரிபக்குவ உதாரணமாக இவர் விளங்குகிருர். இவர் அடைந்த உச்ச நிலையைப் பார்க்கும்போது, கர்ம சக்தியின் மூலமாக, நாம் கூட மகோன்னத ஆன்ம சக்திச் சிகரத்தை அடைந்து விடலாம் என்று புலனுகிறது.

கடவுளை நம்புவது, அநேகருக்கு அவர்களது கடமைப் பாதையைச் சுலபமாக்குகிறது. ஆனல், ஒரு மனிதன் கடவுளையும் கடவுள் சித்தாந்தங்களையும் நம்பி விட்டாலும்கூட, எந்தச் சமயத்திலும் சேராதவனுய், எந்தக் கோயிலுக்கும் செல்லாதவனுய், பரிபூரண உலகாதயவாதியாய் இருந்தாலும்கூட, அவனும் மகோன்னத நிலைமை அடைய முடியும் என்பதை, புத்தரின் வாழ்க்கை நமக்குக் காட்டுகிறது. அவரைப் பற்றித் தீர்ப்புக் கூற நமக்கு உரிமை யில்லை. புத்தரின் காருண்ய உள்ளத்திலே லட்சத்தில் ஓர் அம்சம் எனக்கு இருக்கலாகாதா என்று நான் ஆசைப்படுகிறேன்.

புத்தர் கடவுளை நம்பினரோ, நம்பவில்லையோ; அதைப் பற்றி எனக்குக் கவலை யில்லை. பக்தி மார்க்கத்தாலும், ஞான மார்க்கத்தாலும் பிறர் அடைந்த அதே பரிபூரண நிலையை அவரும் அடைந்து விட்டார். அந்தப் பூரணத்துவம், வெறும் சமயப் பற்றினலோ, நம்பிக்கையாலோ கிடைத்ததல்ல. வாய்ப் பேச்சினல் பலன் இல்லை. கிளிகள் கூடத்தான் பேசிவிடும். பயனை எதிர்பாராத நடத்தையால் தான் பூரணத்துவம் உண்டாகும்.

சூரிய சக்தி

சூரிய கிரணங்களை வெப்பத்திற்கும், மின்சார உற்பத்திக்கும் பெருவாரியாகப் பயன் படுத்துவதில், குறிப்பாக இந்தியாவில் பயன் படுத்துவதில் எனக்கு நம்பிக்கை யுண்டு. இந்தியக் கிராமங்களில் சூரிய சக்தியை உணவு சமைப்பதற்கு எரி பொருளாகவும், நேரடியாக மின்சாரம் உற்பத்தி செய்வதற்கும் உபயோகிக்க முடியும். இந்த இரண்டு காரியங்களைச் செய்வது எளிது: செலவும் குறைவு என்கிருர் சூரிய சக்தி நிபுணரான டாக்டர் எல்லட் என்ற அமெரிக்க விஞ்ஞானி.

பணம்

கலாநிலையன்

மனிதர்களுடைய மனோபாவம் பலவகையாய் இருப்பினும், அனைவரும் பொருள் தேடும் நோக்கத்தில் சமானமாவர்.

ஆசைகள் அநேகம் உள. எனினும் அவையெல்லாம் பொருள் ஆசையில் அடங்கியவை. மனிதர் நோக்கம் எதுவாயினும், முதற் கவலை பொருள் கவலையே. நமக்கு இதம் தரும் பதம் பிறிதொன்று என்று நாம் கருதினும், அதை அடைவதற்குப் பொருளே மூலம் என்று நம்புகிறோம். பொருளை உபயோகிக்கும் வழிகளைப் பற்றி மனிதர் அபிப்பிராயங்கள் வித்தியாசப்படினும், அனைவரும் பொருளின் அவசியத்தையும், மதிப்பையும் அங்கீகரிக்கின்றனர். "பணம் பத்தும் செய்யும்" என்பது பழமொழி.

பணத்தின் உதவியால் படைக்கலாகாதது ஒன்றுமில்லை என்று தோன்றுகிறது. "கொண்டாடும் குலம் புனைவும்," வண்டார் பூங்குழலார் இன்பமும், வானோங்கு மாடங்களும், தோட்டங்களும், வாகனமும், பரிஜனமும், ஊரார் புகழ்ச்சியும் செல்வரையே சேர்கின்றன. "சேரா தனவுளவோ பெருஞ் செல்வர்க்கு" என்கிறார் கம்பரும். ஆதலின் பொருள் பலவகை இன்பங்களுக்கும் ஆதாரமாய் நிற்கின்றது.

பொருளின் அவசியம் இவ்வாறு இருப்பதால், ஒவ்வொரு மனிதனும் செல்வம் சேகரிப்பதில் மனத்தைச் செலுத்துவது இயற்கையே. உலக வாழ்க்கைக்கு இன்றியமையாதனவும், இதத்தைத் தரக்கூடியவையுமான கைத்தொழில், சித்திரம், சிற்பம், சங்கீதம் முதலிய துறைகளில் மக்கள் இறங்கி உழைத்துத் தமது உழைப்பிற்கேற்ற சன்மானம் எதிர்பார்ப்பதும் இயற்கையே. பொருளீட்டும் ஆசை தர்மத்துக்குக் சட்டுப்பட்டிருந்தால் ஒரு விதக் கேடும் விளையாது. தாம் விழையும் பொருளுக் கேற்ப உழைத்தும், உலகத்துக்கு தாம் செய்யும் உதவியால் வரும் ஊதியத்தை அனுபவித்தும் வருபவர் அறத்தின் வழி நிற்பராவர். முயற்சியால் செல்வமெய்தின், அச் செல்வம் சிறப்பாம்.

ஆனலோ, மனிதர் கொள்கின்ற ஆசை, அவர் முயற்சிக்கும், யோக்கியதைக்கும் தக்கவாறு இருப்பதில்லை. உழைப்பின்றியே பொருள் ஈட்டுவதில் நாட்டமுடையார் அநேகர்.

அத்தகையோர் சுற்று முற்றும் நோக்கி, பணம் தேடும் வழிகள் எவையேனும் உளவோ என்று ஆராய்கின்றனர். இவ்வழிகளைக் கண்டுபிடிக்கப் பெரிய ஆராய்ச்சி அவசியமில்லை. தர்ம சிந்தையும் நற்புத்தியும் உடையோர் நீடித்த முயற்சியால் தமது வாழ்நாளின் இறுதியில்கூட ஈட்ட வொண்ணுத பொருளை அயோக்கியர் பற்பல உபாயங்களினுலும், வஞ்சனைகளினுலும் சில நாட்களில் எய்துகின்றனர், நம்பிக்கையுள்ள நல்லவர் கைப்பொருள் எளிதில் பொய்யர் கைவசமாகிறது.

இளைஞர், அறிவீனர், உன்மத்தர் முதலியோரது செல்வம், தந்திரத்தினுலும் பலவந்தத்தினுலும் எளிதில் அபகரிக்கப்படுகின்றது. செல்வம் தீய வழியில் சேகரிக்

கப்படினும், அது தன்னை யடைந்தவருக்குப் பேருதவி புரிகின்றது. பலர் கண்களைப் பகட்டுகிறது. அவர்கள் செய்யும் அக்கிரமங்களை மறைத்து, அவற்றை வெளிப் படுத்த எண்ணங் கொண்டவர் வாயையும் அடக்குகின் றது. மிகப் பெரிய திரவியத்தைச் சேகரித்தவர்களிடம் இவ்வளவு பொருள் எப்படிச்சேர்ந்தது என்று கேட்கவும் ஜனங்கள் பயப்படுகிறார்கள். எளியோர் பயந்து, பயந்து அக்கிரம வழிகளில் சிறிது பொருள் தேடுவதைப் பார்த் துத்தான் மனிதர் கோபாவேசம் கொண்டு அவ்வஞ்ச சரைச் சந்திக்கிழுக்கின்றனர். இந்தக் கீழ்ப்படிகளைத் தாண்டி மேற்சென்றோரை பெருமை பாராட்டியும், கொண்டாடியும், புகழ்ந்தும் வருவது பெரும்பாலோர் இயற்கை.

பொருள் சேர்ந்தால் பயம்: சேராவிடின் துக்கம். ஆதலின் மனிதர் இரு கிளையாய்ப் பிரிந்து, ஒரு திறத் தார் வஞ்சிப்பதும், மற்றொரு திறத்தார் அதனை எதிர்ப் பதுமாய் நிற்கின்றனர்.

பணத்தைச் சேர்ப்பதற்குரிய தந்திர வழிகள், சில சமங்களில் அறநெறிக்கு ஏற்றனவல்ல; சில தர்மத் துக்கு நேர் விரோதம்; அவை அறத்தை மறந்தன்றி, அறிந்தே அறவே அகற்றும் ஆறுகள்; மற்றும் சில அறமோ மறமோ என அயிர்ப்பைத் தந்து, அதர்மத் தையே விளைவிப்பனவாகி, நல்லோரையும் ஈர்த்து சாதுக் களையும் மருட்டும் தன்மையன.

மாணவர்களின் கானக வாழ்க்கை

ஜூலை, ஆகஸ்டு மாதங்களில் அமெரிக்க நாட்டில் வெப்பம் மிகுதி. மக்கள் தங்கள் அலுவல்களிலிருந்து விடுபெற்று விடுமுறையாக வெளியூர் செல்லும் காலம் இது. சிறுவர் பலருக்கும் அது காட்டுக்குச் செல்லும் காலம்! கானகம் புகுந்து கூடாரம் அடித்து அவர்கள் கோடை முகாம் அமைப்பர். கோடை முகாம் அவர்களுக்கு ஒரு புதுமை உலகம். காட்டிலே சுற்றி அலைவதும், கதைகளில் படித்த கனவுலக வீரர்களுடன் களித்துத் திரிவதும், ஆற்றோரத்தில் தூண்டிலோடு தூங்கும் பண்டைக் காலப் பிரமுகர்கள் போலத் தம்மை நினைத்துக் கொண்டு மீன் பிடித்து நேரம் போக்குவதும் அவர்களுக்கு மட்டற்ற மகிழ்ச்சி. பொழுது சாய்ந்ததும் அனைவரும் ஒன்றுகூடி, பெருந் தீ மூட்டி, அதைச் சூழ அமர்ந்திருந்து கதை சொல்லக் கேட்பது அவர்கள் வழக்கம். பின்னர் கானகத்தில் அமர்ந்து தூங்குவர்; அது அவர்களது களைப்பெல்லாம் போக்கும்.

கோடை முகாம் சிறுவர்கள் மறக்க முடியாதவாறு அமைய வேண்டுமானால் மீண்டும் மீண்டும் அவர்கள் அதை விரும்பி வருமாறு அது நடக்க வேண்டுமானால், அதை முதலிலிருந்தே நன்கு திட்டமிட்டு ஏற்பாடு செய்யவேண்டும். இத்தகைய கோடைமுகாம்கள் பெரிய பையன்கள் சிலரது தலைமையில் நடக்கும். இவர்களுக்கு ஆலோசகர்கள் என்று பெயர். கோடை முகாமுக்கு வந்திருக்கும் சிறுவர்களுக்கு நண்பர்களாகவும் ஆசிரியர்

போலவும், தாய் தந்தையர் போலவும் இருக்க வேண்டிய வர்கள் இவர்கள். காட்டு வாழ்க்கை அவர்களுக்குப் பிடிக்க வேண்டும். தங்கள் பொறுப்பில் உள்ள சிறு வர்கள் ஒவ்வொருவரிடத்தும் அவர்கள் அன்பும் மரியா தையும் உள்ளவர்களாக இருக்க வேண்டும். சிறுபிள் ளைத்தனமான கனவுகளைக் கண்டு எரிச்சல் கொள்ளக் கூடியவர்கள் ஆலோசகர்களாக அமைய முடியாது. சிறு வனைச் சின்னப் பயல் என்று மட்டம் தட்டுவோர் அவ் வேலைக்குத் தகுதியற்றவர்.

கல்லூரி மாணவர்களின் சீரிய பணி

பெரும்பாலும் கல்லூரி மாணவர்களே ஆலோசகர் களாக அமைவர். இவர்களில் பலர் விளையாட்டுக்களில் வல்லவர்களாக விளங்குவர்; உடற் பயிற்சித் துறையில் பயிற்சி பெற்று விளையாட்டு ஆசிரியர்களாவதற்குப் படிக்கும் மாணவர்களாயிருப்பர்; கோடை முகாமில் சிறு வர்களோடு பழகியவர்களாக இருப்பர்.

காலை வேளையில் சிறுவர்களுக்கு ஆலோசகர் கைவினைத் தொழில்களைக் கற்றுக் கொடுப்பார். இத் தொழில்களில் அவர் சிறப்பான பயிற்சி பெற்றிருப்பார். பின்னர் பையன்கள் காடுகளில் சுற்றித் திரிந்து வருவர். முன்பு கண்டறியாத பாம்பு, தேரை, பூக்கள் முதலிய வற்றை அவர்கள் இக் காட்டில் காணக் கூடும். நண் பகலுக்கு முன்பு பொதுவாக ஏதாவதொரு விளையாட்டு நடக்கும். ஆலோசகர் வெளியே நின்று வேடிக்கை பார்க்கமாட்டார். அவரும் சிறுவர்களோடு சேர்ந்து விளையாடிக் காட்டுவார். சிறுவர்கள் ஆய்ந்து ஓய்ந்து இருப்பதற்குக் குறிப்பிட்ட இடை வேளைகள் உண்டு. மற்ற வேளைகளில் அவர்கள் சும்மா இருக்க முடியாது. அவர்களுக்கு எப்போதும் ஏதாவதொரு வேலை இருந்து

கொண்டே இருக்கும். ஓய்வு வேளைகளில் ஆலோசகருக்கு மட்டும் ஓய்வு கிடையாது. அவருக்குப் பாடத் தெரிந்தால், நண்பகல் உணவு வேளையில் பாட்டுக் குழுவுக்குத் தலைமை தாங்குவார். அவருக்கு நடிப்புத் திறமை இருந்தால், மற்ற ஆலோசகர்களுடன் சேர்ந்து சிறு சிறு வேடிக்கை நாடகங்களை நடிப்பார்.

அநேக கோடை முகாம்களில் நண்பகல் பந்தி முடிந்ததும், நீச்சல், படகு ஓட்டுதல் முதலிய விளையாட்டுகள் ஆரம்பமாகும். நீந்தத் தெரியாதவர்கள் ஆலோசகர்களாக வர முடியாது. தண்ணீரில் இறங்க அஞ்சும் சிறுவர்களுக்கு அந்த அச்சம் போக்கி நீச்சல் கற்றுக் கொடுக்க வேண்டியது அவர்கள் பொறுப்பு. எல்லாப் பையன்களும் கட்டாயம் நீந்தித் தான் ஆக வேண்டும். படகோட்டப் பையன்களைத் தூண்ட வேண்டியதில்லை; அதில் சண்டை போடவும் அவர்களுக்குச் சொல்லிக் கொடுக்க வேண்டியதில்லை. ஆலோசகர்களுக்கும் படகில் ஏறிச் செல்லாமல் இருக்க முடியாது. தண்ணீரில் ஆபத்தில்லாமல் போய்வர எல்லோருக்கும் தெரிய வேண்டும். நீரில் மூழ்கியவர்களைக் காப்பாற்ற அனைவருக்கும் ஆலோசகர் பயிற்சி அளிப்பார். முதலுதவி என்பது இச் சிறுவர்களுக்கு நன்ருகப் பழக்கமான ஒன்று. காலில் புகுந்த முள்ளை எடுத்தல், அடிபட்ட விரலுக்குக் கட்டுக் கட்டுதல் முதலியவை எல்லாம் அவர்களுக்குச் சர்வ சாதாரணம். பெரிய காயங்கள் முதலியவை ஏற்பட்டால் கவனிப்பதற்குப் பெரும்பாலான முகாம்களில் பயிற்சியுள்ள மருத்துவத் தாதிகள் உண்டு.

பொழுது சாய்ந்து விட்டது; மரங்களின் நிழல் நீண்டு மறைகிறது. ஒருவாறு நீச்சலை முடித்து எல்

லோரும் கரையேறி விட்டார்கள். பின்னர், பெரும் பாலான முகாம்களில் நாட்டுப் பற்று ஊட்டும் பயிற்சி நடைபெறும்,

கடைசியாக. இரவு எட்டு மணிக்கும் ஒன்பது மணிக்கும் இடையில், கதை கேட்கும் இனிமையான நேரம்; ஆலோசகர்கள் பெருந் தீ மூட்டி வைப்பர். சிறுவர்கள் அதைச் சுற்றி வட்டமாக உட்காருவர். அமெரிக்கர் புது வளம் தேடி, சம நிலங்களையும் காடுகளையும் கடந்து மேற்கு நோக்கிச் சென்று குடியேறி நாட்டைப் பெரிதாக்கிய "அந்தக் காலத்தைப்" பற்றிய கதைகள் கேட்கக் கேட்க அவர்களுக்குத் தெவிட்டாது. அந்தக் காலத்தில் சிவப்பு இந்தியர், மாடு மேய்ப்போர் முதலியவர்களைப் பற்றியக் கற்பனைக் கண்ணால் காண்பவைகளை யெல்லாம் சேர்த்து ஆலோசகர் மிக இனிமையாகக் கதை சொல்லுவார். கேட்பார் உள்ளத்தினின்று இவை நெடுநாள் வரை மறையா. இச் சூழ்நிலையில் பாடல்களும் மிக இனிமையாக முழங்கும்.

இவ்வளவு இனிமையாகக் கதைக் கேட்டும் பாட்டுப் பாடியும் மகிழும் கட்டத்திலிருந்து எப்படியோ ஒருவழியாய், கொம்பு ஊதும் பையன், எழுந்திருந்து தன் கொம்பைக் கண்டு பிடித்து எடுத்து ஊதுவான். எல்லோரும் உறங்கப் போகலாம் என்பது அதன் பொருள். கோடை முகாம் இனி மறுநாள் காலை விழித்தெழும்.

சுதந்திரம்

ஜே. பி. எஸ். ஹால்டேன்

ஒரு விஷயத்தை விஞ்ஞான ரீதியில் பரிசீலனை செய்யவேண்டுமானுல் அதிலுள்ள குறைவு நிறைவுகளை ஆராயவேண்டும். மனித சாதியின் சுதந்திரத்தை அலசிப் பார்க்க வேண்டுமானுல், ஜான் என்பவனைக் காட்டிலும் பீட்டர் என்பவன் அதிக சுதந்திரத்தோடு வாழ்கிருன் என்கிற கேள்விக்குச் சரியான தர்க்க ரீதி யான விடை அளிக்கவேண்டும். ஜான் நியூயார்க்கில் பஸ் டிரைவராக இருக்கலாம். பீட்டர் இங்கிலாந்தில் பஸ் டிரைவராக இருக்கலாம்; அல்லது ஒரு நகரசபைத் தலைவராகவோ அல்லது ஒரு கவிஞனுகவோ இருக்கலாம். எப்படி இருந்தாலும் சரி அந்தக் கேள்விக்கு விடை அளிப்பது சுலபமான காரியம் அல்ல. ஜான் பீட்டரைக் காட்டிலும் ஒரு சில விஷயங்களில் அதிக சுதந்திரத் தோடு வாழலாம். நினைத்தால் ஜான் இலக்கியம் படிக் கலாம். மார்க்ஸ் எழுதிய புத்தகங்களைப் படிக்கலாம். தினம் தினம் சினிமாவுக்குப் போகலாம். இதே காரியங் களைப் பீட்டர் செய்ய முடியாத நிலையில் இருக்கலாம். ஆனுல் பீட்டர் இரவு முழுவதும் குடித்துவிட்டுக் காலம் கழிக்கலாம். அல்லது தன்னுடைய அழகான உத்தி யான வனத்தில் பொழுதைப் போக்கலாம். இம்மாதிரி சந்தர்ப்பங்களில் யார் அதிக சுதந்திரத்துடன் இன்ப வாழ்வு வாழ்கிருர்கள் என்று சொல்லுவது கடினம், பொதுப்படையாக பதில் சொல்ல முடியாவிட்டாலும்,

குறிப்பிட்ட விஷயத்தில் ஒருவனைக் காட்டிலும் மற்றவன் அதிக சுதந்திரம் உடையவன் என்று கூறுவது சுலபம். ஆனால் நாட்கள் செல்லச் செல்ல அவ்விருவரில் எவன் அதிக சுதந்திர முடையவன் என்று சொல்லலாம்.

மனித வாழ்வில் உள்ள பல்வேறு துறைகளையும் தனித் தனியே எடுத்து ஆராயத் தொடங்கினால், ஒரு துறையில் ஒரு சிலர் சுதந்திரத்தோடு வாழ்வது வேறொரு துறையில் சுதந்திரத்தோடு வாழும் மக்களைப் பாதிக்கத்தான் செய்யும். வாழ்க்கையில் பல பிரிவுகளைப் பார்ப்பது போலவே, கால வித்தியாசத்துக்கு ஏற்ப காலப்போக்குக்கு மதிப்புக் கொடுத்து, ஒரு காலத்தி லிருந்த சுதந்திர வியாக்கியானத்தையும் பிறிதொரு காலத்திலிருந்த சுதந்திர வியாக்கியானத்தையும் சீர் தூக் கிப்பார்க்க வேண்டும். சுதந்திர வளர்ச்சியும், சுதந்திரத் தடையும் விஞ்ஞான முன்னேற்றத்தை ஒட்டியே பின் னிப் பிணைந்து வந்திருக்கின்றன. அச்சு இயந்திரம் கண்டு பிடிக்கப்படாத காலத்தில் எழுத்துச் சுதந்திரத் திற்கு அவசியமே ஏற்படவில்லை. ஆனால் அச்சு இயந் திரத்தின் அவசியத்தை அறிந்த இக்காலத்திலோ, எழுத்துச் சுதந்திரத்துக்கும் சிற்சில தடைகள் விதித் திருக்கிறார்கள்; ஒரு நாட்டு மன்னனைக் கொன்று விடும்படி தூண்டி எழுதுவது குற்றம்.

சுதந்திரத் தடைகளில் இரண்டு விதம் உண்டு. ஒன்று நீதியின் பெயரால் சட்ட பூர்வமாக விதிக்கும் தடைகள். இரண்டு, யுகாந்த காலமாக வழி வழி வந்த வழக்கமான தடைகள். ஒரு மனிதன் தெருவழியே கௌபீனம் மட்டும் உடுத்திச் செல்லுவது சட்டவிரோத மான தல்ல. ஆனால், அப்படிச் செல்லுவதுவழக்கத்துக்கு விரோதமான செய்கை.

பொருளாதார ஏற்றத் தாழ்வுகள்தான் சுதந்திர வாழ்க்கையை நிர்ணயிக்கிறது. விஞ்ஞான வளர்ச்சியின் பலாபலன்களை வாழ்க்கையில் அனுபவிக்கப் பணம் படைத்த ஒரு சிலரால் தான் முடிகிறது. எல்லோரும் கார் வைத்துக் கொள்ளவோ, விமானத்தில் பறக்கவோ முடியாது. ஒரு சிலருக்கு வாழ்க்கையில் சௌகரியத்தை உண்டாக்கும் விஞ்ஞான வளர்ச்சியே தொழிலாளர் களின் சுதந்திர வாழ்வில் மண்ணைப் போடுகிறது. முன் காலத்தி லிருந்ததைவிட வேலை நேரப் பெருக்கமும், ஓய்வு நேரக் குறுக்கமும் ஏற்பட்டதற்குக் காரணம் இயந்திர வளர்ச்சிதான்.

புற விஷயங்களினுல் மனிதனுடைய சுதந்திரம் எவ்வளவு தூரம் பாதிக்கப்படுகிறது என்பதைப் பற்றிக் கவனித்தோம். அக விஷயங்களினுல் மனித சுதந்திரம் தடை செய்யப்படுவதைச் சற்று ஆராய்வோம். அக-விஷயமும் இருவகைப்படும்; ஒன்று மனம் சம்பந்தப்பட்டது. மற்றொன்று உடல் சம்பந்தப்பட்டது. பக்க வாதத்தினுல் அவதிப்படும் ஒரு நோயாளி, திடகாத்திரமுள்ள மற்றொருவரைப் போலச் சுதந்திரத்தோடு சுகவாழ்வு வாழ முடியாது. ஆனுல் மரக்கால்களின் உதவியால் நடக்கிற ஒரு மனிதன், ஆசாரவிகாரம் (Obsessional Psychosis)* கொண்ட மனிதனைக் காட்டிலும் சுதந்திர முடையவன் என்றுதான் சொல்ல வேண்டும்.

தனி மனிதனுடைய சுதந்திரம் அவனுடைய மனோ நிலையைப் பொறுத்திருக்கிறது. மதுபானம் அருந்தும் பழக்கமுடையவன் பிறரைக் காட்டிலும் சுதந்திரம்

---

* தான் அசுத்தமாக இருப்பதாக எண்ணி கால்களை அடிக்கடி ஒரு நாளைக்கு 50, 60 தடவைகள் கழுவிச் சுத்தம் செய்து கொள்ளத் தூண்டும் மனோ வியாதி.

குறைத்தவனுகத்தான் இருக்கிருன். குடிவெறியில் தன் நினைவு இல்லாமல் தான் இஷ்டப்பட்டவற்றைச் செய்ய முடியாத நிலையில் மதிமயங்கிக் கிடக்கிருன்! தான் உண்டு, தன் ஆபீஸ் உண்டு, மிஞ்சினுல் மாலையில் பந்தாட்டம் உண்டு என்று இருக்கிற பணக்காரர்களையும் சுதத்திரமானவர்கள் என்று கருதக்கூடாது. குறிப்பிட்ட ஒரு சில கொள்கைகளில் மட்டுமே அவர்களுடைய போக்கு அமைந்துவிடுகிறது. ஆனுல் தன்னிச்சையாய்த் தன் இஷ்டப்படி, சொன்ன சொல்லைக் காப்பாற்ருமல், ஒரு மாதத்துக்கு ஒரு மனைவியாக மாற்றிக்கொண்டிருக்கிறது தான் சுதந்திர வாழ்க்கை என்று அர்த்தமல்ல.

ஒரே பண்புள்ள இரண்டு மனிதர்களைக் காண்பது அரிது. ஒவ்வொரு மனிதனும் தனிப்பட்ட பண்புகள் உள்ளவனுய் இருக்கிருன். ஒருவன் கணக்குப் பிரியனுக இருப்பான். மற்றவன் சங்கீத ரசிகனுக இருப்பான். உதாரணமாக என்னைப்பற்றிய வரையில், கணக்கும், சங்கீதமும் எனக்குப் பிடிக்கும். சங்கீதத்தைக் காட்டிலும் கணக்குப் போடுவதில்தான் எனக்கு அதிக சிரத்தை. நானே ஒரு சங்கீத ரசிகர் குடும்பத்தில் பிறந்திருந்தால், ஒரு சங்கீத வித்துவானுகவோ, அல்லது சங்கீத கர்த்தனுகவோ மாறியிருப்பேன். மனிதனுடைய கற்பனு சக்தியும் குறிப்பிட்ட விஷயத்தில் அதிக சிரத்தையும் அவன் இருக்கும் சூழ்நிலையைப் பொறுத்தே அமைகின்றது என்பது உண்மை. 'தன்னிச்சையாய், மனம் போகிற போக்கில் தடையொன்றும் இல்லாமல் செயலாற்றுவது தான் சுதந்திரம்' என்று அரிஸ்டாட்டில் சொல்லுவதை நான் மறந்துவிடவில்லை. சுகவாழ்வு வாழவேண்டும் என்ற ஒரே நோக்கத்துடன் சுகம் தேடுவதில் சுகமில்லை. மற்ற விஷயங்களில் அறிவைச் செலுத்தி,

அவை கைகூட நாம் செய்கிற முயற்சிகளில்தான் நமக்கு உண்மையான சுகம் கிட்டுகிறது.

ஊகமான சுதந்திரத்தைப் பற்றியும், உண்மையில், நடைமுறையில் இருக்கிற சுதந்திரத்தைப் பற்றியும் விவரமாக எடுத்துக் கூறும் அறிஞர்களான ஸ்பைனோசா, ஹெகல், ஏங்சல்ஸ்; காட்வெல் முதலியோர், 'மனிதத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளும்படியான சமூகத்தில்வாழ்வதுதான் சுதந்திரம்' என்று கூறுவதை நான் ஆமோதிக்கிறேன். ஆகாயத்தில் பறக்கும் சக்தி வாய்ந்த மாய ஜமுக்காளமும் ஓர் அடி எடுத்து வைத்தால் நூறு மைல் போகக்கூடிய மாந்திரிகச் செருப்புகளும் உள்ள கற்பனை உலகத்தை விட்டு மனிதன் விஞ்ஞான வளர்ச்சி உலகத்துக்கு வந்துவிட்டால், தானே தன்னுடைய சுதந்திரத்துக்குத் தடை விதித்துக் கொள்ள முற்படுகிறன். விஞ்ஞான வளர்ச்சிக்கேற்ப தன்னுடைய சுதந்திரத்தையும் வரையறுத்துக் கொள்ளுகிற மனிதன், தன்னுடைய உள்ளப்போக்கை, மனப் பண்பை, எண்ணங்களை நன்கு அறிந்து கொள்ளுவானுகில் தன் சுதந்திரத்தை அக விஷயங்கள் எவ்வளவுதான் பாதித்தாலும் சுதந்திரத்தோடு வாழமுடியும்.

தன்னிஷ்டம் போல் எங்கு வேண்டுமானுலும் செல்லும் உரிமை மனிதனுக்கு அவசியம். அந்த உரிமையைப் பறித்தால் அவன் சுதந்திரமுள்ளவனுக இருக்க மாட்டான். பழங் காலத்தில் நடை முறையில் இருந்த சுதந்திரம் இன்று பறி போய்விட்டது. இன்று நாம் ஒரு நாட்டை விட்டு அந்நிய நாட்டுக்குப் போகவேண்டுமானுல் நாம் செல்ல விரும்பும் நாட்டின் உத்தரவு பெற வேண்டும். பிரயாண சுதந்திரத்துக்கு மூல காரணமாயுள்ளவை, குதிரை, வண்டி, ரயில், மோட்டார், கப்பல்,

ஆகாய விமானம் முதலியவைதாம். விஞ்ஞான உதவியால் துரிதமாக ஓடும் வண்டிகள் கண்டுபிடிக்கப்பட்டவுடன், சில சிறு கட்டுப்பாடுகளும் தோன்றின. ஒரு குறிப்பிட்ட வேகத்துக்கு மேல் போகக்கூடாது என்கிற சட்டமும் அமலுக்கு வந்திருக்கிறது!

தன்னிச்சைப் போல் எங்கு வேண்டுமானாலும் போகலாம் என்கிற உரிமையில் சில கட்டுத் திட்டங்கள் இருப்பது நல்லதுதான். இல்லாவிட்டால் என்னுடைய வீட்டுக்குள் யார் வேண்டுமானாலும் புகுந்து என்னுடைய அந்தரங்க வாழ்க்கை உரிமையைப் பறிப்பார்கள். பிரயாண சுதந்திரத்தை மக்கள் அனுபவிக்காமல் இருப்பதற்குக் காரணம் வேலைத் தொந்தரவு காரணமாக அவகாசம் கிடைக்காமல் இருப்பது தான்.

இந்தப் புறவிஷயங்களே மட்டுமின்றிச் சில வகுப்பாருடைய மூடப் பழக்க வழக்கங்களும் பிரயாணம் செய்வதை அவ்வளவாக ஆமோதிப்பதில்லை.

மனிதன் உற்பத்தி செய்கிறானோ இல்லையோ, உற்பத்தியான பொருள்களை வாங்க அவனுக்கு உரிமை வேண்டும். அத்தியாவசியத் தேவையான உணவு, வீடு, உடை மூன்றும் போக மற்றத் தேவைகளிலும் கூட மனிதனுக்குக் கட்டுப்பாடு இருக்கக்கூடாது. அவசிய மேற்படுகிறபொழுது கட்டுப்பாடு வேண்டியதுதான். 'மதுபான விற்பனை விஷயங்களில் தடை இருக்க வேண்டும்; ஏனென்றால் மக்கள் அனாவசியமாக அந்த உரிமையைப் பாழ்படுத்திக் கொள்ளுகிறார்கள்' என்று சிலர் சொல்லுகிறார்கள். 'குடி ஒழிப்பு' அவசியம் என்று சொல்லுவது அவ்வளவு விரும்பத் தக்கதல்ல. அம்மாதிரியான தடைகள் இந்தியாபோன்ற நாடுகளில் வெற்றி பெறலாம்.

பழக்க வழக்கங்கள் காரணமாக ஒரு சாரார் சில பொருள்களை வாங்கமாட்டார்கள்.

உற்பத்தியாளர்கள் சுதந்திரம், எழுத்தாளர்கள், விஞ்ஞானிகள் முதலியோரைத் தவிர, மற்றத் துறையில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு ஓய்வு, வருஷ விடுமுறை, சம்பள உயர்வு போன்ற உரிமைகள் வேண்டும். உற்பத்தியாளர் உரிமையில் தங்களுடைய இஷ்டம் போல் பொருள் உற்பத்தி செய்யும் சுதந்திரமும் அடங்கியுள்ளது. அதுவும் இந்த விஞ்ஞான வளர்ச்சி அடைந்த இந்தக் காலத்தில் அவசியம். ஆனால் அந்த உரிமை சிலருடைய ஏக போக உரிமையினால் பெரிதும் பாதிக்கப் படுகிறது.

தனக்குப் பிரியமான, தன் மனநிலைக்கு ஒத்த வேலையைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளும் உரிமை மனிதனுக்கு அவசியம். ஆனால் முதலாளித்துவ சமுதாயத்தில், வேலை யில்லாத் திண்டாட்டம் தலை விரித்தாடும் சமூகத்தில் மேற்சொன்ன சுதந்திரம் சாத்தியமில்லை.

ஆண் பெண் உறவு சம்பந்தப்பட்ட மட்டில், இரு பாலருக்கும் ஒத்த சுதத்திரம் வேண்டும். கூடி இல் வாழ்க்கை நடத்தவோ, அல்லது பிரிந்து போகவோ உரிமை வேண்டும்.

தான் எழுதுவதும், பேசுவதும், பிறரைப் பாதிக்காமலும், குற்றங்கள் செய்யத் தூண்டாமலும், அரசாங்கத்துக்கு விரோதமில்லாமலும், காலித்தனமாக இல்லாமலும் இருக்கிற வரையிலும் மனிதன் எழுத்து, பேச்சுச் சுதந்திரத்தோடு இருக்கலாம். தனி மனிதனுடைய கௌரவத்துக்குப் பங்கம் விளைவிக்கும்படி பேசவோ எழுதவோ கூடாது.

அரசியல் சுதந்திரம்தான் ஒரு நாடு சுதந்திர நாடா இல்லையா என்று சொல்ல உதவுகிறது. அரசியல். சுதந்திரத்தைப் பற்றிப் பல கருத்துக்கள் இருப்பினும், ஜனநாயக ஆட்சிதான் ஒரு சுதந்திர நாட்டுக்கு அழகு. ஜனநாயக ஆட்சி முறை இருவகைப்படும். ஒன்று: ரோமானியர் கையாண்ட ஜனநாயக முறை; இரண்டு; அமெரிக்காவில் நடைமுறையில் இருக்கும் ஜனநாயக ஆட்சி. இரு முறைகளிலும் குறைவு நிறைவுகள் உண்டு, அமெரிக்க ஜனநாயகத்தின் குறை என்னவென்ருல், ஜனப் பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு பதவிக்கு வந்தால் தாங்கள் என்னவெல்லாம் செய்வதாக வாக்களித்தார்களோ அவற்றை மறந்து சுயநலப் பிரியர்களாய் மாறிவிடுகிருர்கள்! மேலும் ஆட்சி பீடத்துக்கு வருகிறவர்களும் ஜனங்களின் உண்மையான பிரதிநிதிகள் என்று சொல்ல முடியாது. பலம் பொருந்திய இரண்டொரு கட்சியின் அங்கத்தினர்களே பதவிக்கு வரமுடிகிறது. அந்தக் கட்சியின் கொள்கைகளை நிர்ணயிப்பதும் அந்தக் கட்சியில் செல்வாக்கு வாய்ந்த ஓரிரண்டு தலைவர்கள்தான், இங்கிலாந்தைப் போன்ற முதலாளித்துவ சிறுபான்மையினர் தங்களுடைய ஆதிக்கத்தின்கீழ் இருக்கிற நாலைந்து பெரியதொழிற்சாலைகளை அடைத்து விடுவதனலோ, அல்லது நாலைந்து 'பாங்கு' களை மூடிவிடுவதனலோ, நாட்டில் பொருளாதார நெருக்கடியை உண்டு பண்ணி, அரசாங்கத்தை நிலைகுலையச் செய்துவிடலாம். ஆகவே அந்த நாட்டின் அரசியல் சுதந்திரம், சிறுபான்மையினரான முதலாளிகளிடம் இருக்கிறதென்றே சொல்லவேண்டும். உண்மையான அரசியல் சுதந்திரம், ஏழை பணக்காரன், ஆண்டான் அடிமை, முதலாளி தொழிலாளி என்கிற வேற்றுமைகள் இல்லாத மக்கள் சமூகத்தில்தான் இருக்கமுடியும்.

தன் இஷ்டப்படி எந்தக் கடவுளை வேண்டுமானாலும் வழிபடவும், இல்லையேல் வழிபடாமல் இருக்கவும் மனிதனுக்குச் சுதந்திரம் வேண்டும். மத சம்பந்தமான விஷயங்களில் ஒரு மதத்தினர் பிற மதத்தினரின் கொள்கை கோட்பாடுகளுக்கு மதிப்புக்கொடுத்து தாராள மனப்பான்மையோடு பழகவேண்டும்.

பெண்களும் ஆண்களோடு சரி நிகர் சமானமாக வாழ அவர்களுக்கு உரிமை வேண்டும்.

மனிதனின் தனது உரிமைக்குப் போராடும்பொழுது பிற்கால மனிதர்களாகிய சிறு குழந்தைகளுக்குத் தங்கள் இஷ்டம்போல் தங்களுடைய போக்குக்குத் தகுந்தவாறு தங்களுடைய கல்வி முறையைத் தேர்ந்தெடுக்க உரிமை வேண்டும். பார்க்கப் போனால் பணக்காரக் குழந்தைகளைக் காட்டிலும் ஏழைப் பிள்ளைகள் தான் சுதந்திரத்தோடு வாழ முடிகிறது.

மனித சுதந்திரம் நாட்டுக்கு நாடு, நூற்றாண்டுக்கு நூற்றாண்டு, விஞ்ஞான வளர்ச்சிக்குத் தகுந்தவாறு மாறிக் கொண்டேயிருக்கிறது. ஒரு மனிதன் சுதந்திரம் என்று நினைக்கும் உரிமைகள் மற்றவனுக்கு அடிமைத் தளையாகத் தோன்றலாம். வர்க்கபேதமுள்ள சமூக அமைப்பில், எல்லா வர்க்கத்தினரும் இன்புற்று வாழ முடியாது; சமூகத்தின் மேல் தட்டில் இருக்கும் முதலாளி வர்க்கம் தான், அரசியல் பொருளாதாரம், மதம் முதலிய சுதந்திரங்களோடு வாழமுடியும். ஒரு சாராரின் சுதந்திரத்தை அந்த நாட்டின் சுதந்திரம், அந்நாட்டு மக்களின் சுதந்திரம் என்று கூற முடியுமா ?

மூன்று முக்கியமான விஷயங்களை மனத்தில் இருத்த வேண்டும். முதலாவதாக, தான் சர்வ சுதந்திரத்தோடு

வாழும் ஒருவன் பிறர் சுதந்திரத்தைப் பற்றிக் கவலைப் படுவதே கிடையாது. இரண்டாவதாக, மனிதன் கூடி வாழும் பிராணி. தான் வாழும் சமூகத்துக்கு எற்ற விதத்தில் வாழவேண்டும். மூன்றாவதாக சுதந்திரம் தேங்கி நிற்கும் ஒன்றல்ல. சர்வதேச வர்த்தமானங்களை ஒட்டி வளருகிறது.

ஒயிட்ரியம்

ஜஸி டிஸைன் என்ற ஆங்கிலப் பெண் மூளைக் கழலையால் வருந்திக் கொண்டிருந்தாள். முகம் வீங்கியிருந்தது. கண்களைத் திறக்க முடியாதபடி வலி இருந்து கொண்டிருந்தது. அவள் சிகிச்சை பெற லண்டனிலுள்ள ஸெயின்ட் தாமஸ் வைத்திய சாலைக்குச் சென்றாள். டாக்டர் பேட்மென், அவளுடைய மூளையில், கதிரியக்கமுள்ள ஒயிட்ரியம் (ஒருவகை அபூர்வ உலோகம்) உருண்டைகளைச் செலுத்தி நோய்களை குணப்படுத்தி விட்டார்.

"இந்த முறையில் இதுவரையில் எவருக்கும் சிகிச்சையளித்ததாகத் தெரியவில்லை. ஒயிட்ரியம் உருண்டைகளிலிருந்த அணுவாற்றல், ஊறுபட்ட திசுக்கள்மீது பட்டதும், நோய் விலகிவிட்டது. ஒயிட்ரியம், அணுவாற்றலை விரைவில் வெளிப்படுத்தும் இயல்புடையது. கதிரியக்கமிழந்த உருண்டைகள் செயலற்று விடும்" என்று டாக்டர் பேட்மென் கூறினர்.

கூட்டு ஒப்பந்தம்

பிரிட்டனில் கூட்டு ஒப்பந்த முறையில், தொழிலாளர்களுடைய ஊதியத்தை நிர்ணயிப்பதே இன்றுள்ள வழக்கம். ஊதிய நிர்ணயம் பற்றித் தொழிலாளிக்கும் முதலாளிக்கும் நேரடியாக ஏற்படும் உறவு மாறிவிட்டது. ஒவ்வொரு தொழிலிலும் ஊதிய நிர்ணயம் செய்ய முதலாளிகளும் தொழிற் சங்கத் தலைவர்களும் கலந்தாலோசிக்கிறார்கள். தொழிலாளர் இயக்கமும் முதலாளிகள் சங்க இயக்கமும் சிறப்பாக வளர்ந்திருப்பதால்தான் கூட்டு ஒப்பந்த முறையைச் செயலாற்ற முடிகிறது.

பிரிட்டிஷ் பொறியியற் தொழிலை எடுத்துக்கொள்வோம். தொழில் பிரச்னைகளையும் ஊதிய சிக்கல்களையும் கவனிக்க எஞ்சினீயரிங் அன்ட் அலைட் எம்ப்ளாயர்ஸ் நாஷனல் பெடரேஷன் என்ற முதலாளிகள் ஸ்தாபனத்தின் பிரதிநிதிகளும், கான்பெடரேஷன் ஆவ் ஷிப் பில்டிங் அன்ட் எஞ்சினீயரிங் யூனியன்ஸ் என்ற தொழிலாளர் ஸ்தாபனத்தின் பிரதிநிதிகளும் அடிக்கடி கூடிப் பேசுகிறார்கள். இவர்கள் செய்யும் முடிவை சம்பந்தப்பட்ட தொழில்களின் முதலாளிகளும் தொழிலாளர்களும் ஏற்றுக்கொள்கிறார்கள். கான்பெடரேஷன் சுமார் பன்னிரண்டரை லட்சம் தொழிலாளர்களுடைய பிரதிநிதி ஸ்தாபனம். அதன் முடிவு பன்னிரண்டரை லட்சம் பேர்களையும் கட்டுப்படுத்துகிறது.

ஊதியம், வேலைநேரம், பிறவசதிகள் எனப் பல விஷயங்களை கூட்டு ஆலோசனை கூட்டங்களில் பரிசீலனை

செய்கிருர்கள். சமரசப் பேச்சினுல் முடிவு செய்ய முடியாத விஷயங்களை மத்தியஸ்தத்திற்கு விட ஒப்புக்கொள்வது, இதிலுள்ள ஓர் அம்சமாகும்.

சில நன்மைகள்

கூட்டு ஒப்பந்தத்தினுல் ஒவ்வொரு தொழிலுக்கும் நாடெங்கும் ஒரேவித ஊதிய முறை நிர்ணயிக்கப் பெறுகிறது. இதனுல் முதலாளிகளுக்கும் ஒருவிதத்தில் லாபமுண்டு. தொழில் ஸ்தாபனங்கள் ஒன்றுடன் ஒன்று போட்டியிடும்போது உற்பத்திச் செலவைக் குறைக்க முயலுவதுண்டு. உற்பத்திச் செலவைக் குறைப்பதில் முக்கிய அம்சம் கூலி வெட்டுத்தான். கூட்டு ஒப்பந்த முறையால் கூலி நிர்ணயம் செய்யப்படுவதால் அதை மதிக்கும் பொறுப்பு முதலாளிக்கு உண்டு. ஆகவே தொழில் வளர்ச்சிக்காக, தகாத முறையில் போட்டி வாய்ப்பு மாறிவிடுகிறது.

கூட்டு ஒப்பந்தத்தை இருசாராரும் மனப்பூர்வமாக ஏற்று நடந்தால்தான் வெற்றியுண்டு. இல்லாவிட்டால் ஒப்ப தம் முறிந்துவிடும். ஒப்பந்தத்தை மதித்து நடப்பதி தொழில் சங்க வாதிகளுக்கு தனி அக்கறை உண் . முதலாளிகள் ஸ்தாபனங்களும் தங்களுடைய அங்கத்தினர்களைக் கட்டுப்படுத்துவதில் அக்கறை காட்டுகின்றன. கூட்டு ஆலோசனைக் கூட்டத்தின் முடிவுகளை நிறைவேற்ற சட்ட உதவியில்லை. இருசாராரும் விருப்பத்துடன் பேசிச் செய்யும் முடிவாகையால், தார்மீக உணர்ச்சியுடன் அதற்குக் கட்டுப்பட்டு நடக்கிருர்கள். கூட்டு ஒப்பந்த முடிவுகளை நிறைவேற்றுவதில் முதலாளிகள் சங்கத்தில் சேராத முதலாளிகளும் கூட சிரத்தை காட்டுகிருர்கள். இதிலிருந்து கூட்டு ஒப்பந்தத்தின் செல்வாக்கை ஊகித்துக் கொள்ளலாம்.

கூட்டு பேரத்திலுள்ள நன்மைகளை தொழிற்சங்கங்களும் முதலாளிகளும் அரசாங்கத்தாரும் நன்ருக உணர்ந்திருக்கிருர்கள். இதனுல் பல சிக்கல்களைத் தீர்க்க முடிகிறது; விரும்பாத விளைவுகளைத் தவிர்க்க முடிகிறது. ஒவ்வொரு தொழிலிலும் கூட்டு ஆலோசனை முறை ஏற்படுவதற்கு அரசாங்கத்தாரே ஆதரவு காட்டுகிருர்கள்.

கூட்டு ஆலோசனை முறை தொழிலுக்குத் தொழில் மாறுபடுகிறது. சில தொழில்களில் யந்திர சாதனங்களின் உபயோகம் அதிகமாக இருக்கும். சில தொழில்களில் நபர் விகிதாசாரத்தில் உற்பத்தியை மதிப்பிட முடியாது. உதாரணமாக அச்சகத் தொழிலாளர்களின் நிலையும் உழைப்பும் வேறு; நிலக்கரிச் சுரங்கத்தில் உழைப்போர் நிலை வேறு. எப்படியிருந்தாலும் கூட்டு ஆலோசனையிலுள்ள நன்மைகளை இரு சாராரும் அறிந்திருக்கிருர்கள். சட்டத்தின் நிர்ப்பந்தமின்றி வாலாயமாகச் செய்து கொள்ளும் ஒப்பந்த மாகையால், இரு சாராரும் வாக்கைக் காப்பதில் அக்கறை காட்டுகிருர்கள். இதனுல் தொழிலில் அமைதி நிலவுகிறது; உற்பத்தியும் பெருகுகிறது. தொழிலாளர்களும் நிம்மதியாக வாழ முடிகிறது.

கொய்த மலர்கள்

பிரார்த்தனை

உலகுய்ய மால்நின்ற உயர்வேங் கடத்தே
அலர்மகளை முன்னிட்டு அவன்தன்—மலரடியே
வண்சரணுய்ச் சேர்ந்த மகிழ்மாறன் தாளிணையே
உன்சரணுய் நெஞ்சமே! உள்.

—சீயர்

எறும்பின் வழி

சர்க்கரையையும் மணலையும் சேர்த்து வைத்தாலும், எறும்பு மணலைத் தள்ளிவிட்டுச் சர்க்கரையை மட்டும் இழுத்துச் செல்கிறது. அதுபோல, பரமஹம்ஸர்களும் பக்தர்களும் நல்லோரைத் தீயரிடமிருந்து பொறுக்கி எடுத்துவிடுகின்றனர்.

—ஸ்ரீ சங்கரர்

அரசியல்

போதுமான அறிவும் அதற்கேற்ற அனுபவமும் இல்லாதவர்கள் அரசியலில் புகுந்தால், அரசியல் சீர் குலைந்துவிடும். அரசியலை நடத்துபவர்கள் ஞானிகளாக விளங்க வேண்டும்; ஆள்பவன் ஒரு ஞான வேந்தனுய் இருக்க வேண்டும்.

—பிளேட்டோ

சிறந்த தர்மம்

தர்மம் என்பது வேறன்று. அது பழைய காலத்திலிருந்து வரும் நீதிநெறி. அது சர்வ நட்புத் தன்மை

யைப் போதிக்கிறது. எல்லா ஜீவராசிகளுக்கும் இம்மியளவும் தீமை புரியக்கூடாது. அது இயலாதாயின் எவ்வளவு குறைந்த தீங்கு செய்ய முடியுமோ, அவ்வளவு தீங்கு மாத்திரம் செய்ய வேண்டும். இவை அமைந்த வாழ்க்கைவிதமே எல்லாவற்றிலும் சிறந்த தர்மம் எனப்படும்.

—சாந்திபர்வம்

அடிமைகள்

உலகம் இருப்பது எனக்காக, நான் இருப்பது உலகத்திற்காக அன்று. நன்மையும் தீமையும் நமக்கு அடிமைகளாம். நாம் அவற்றுக்கு அடிமைகள் அல்லோம்

—சுவாமி விவேகாநந்தர்

தெய்வீகத் தன்மை

வானத்தில் பிரகாசிக்கும் சூரியன் பிரபஞ்சத்துக்கெல்லாம் உயிரளிக்கும் வெப்பத்தைக் கொடுக்கிறது. ஆனால், அதன் அருகில் எவனும் சென்றால், அது அவனைச் சுட்டுச் சாம்பலாக்கிவிடும். தெய்வீகத் தன்மையும் அதைப்போலவே இருக்கிறது. அஹிம்சையை நாம் கடைப்பிடிக்கும் அளவுக்கு நம்மிடம் தெய்வாம்சம் நிறைந்து விளங்குகிறது. ஆனால் நாம் தெய்வமாகவே ஆகிவிட முடியாது.

—காந்தியடிகள்

வழுக்கு நிலம்

இவ்வுலகம் ஒரு வழுக்கு நிலம். ஜாக்கிரதையாக இருந்தாலன்றி எவரும் கீழே வழுக்கி விழக்கூடியவரேயாவர்.

—சுவாமி விவேகாநந்தர்

கெட்ட நாள்

இறைவனைப் பேசாத நாளே உண்மையில் ஒரு கெட்ட நாளாகும்; புயல் வீசும் நாளன்று.

—சுவாமி விவேகானந்தர்

இரண்டும் ஒன்றே

ஒரு பசுவைக் காப்பாற்றுவதற்காக ஒரு மனிதனை நான் கொல்லமாட்டேன். அதேபோல ஒரு மனித உயிரைப் பாதுகாப்பதற்காக ஒரு பசுவைக் கொல்லவும் மாட்டேன். அந்த மனித உயிர் எவ்வளவு அபூர்வமான உயிராக இருந்தாலும் சரிதான்.

—காந்தியடிகள்

உண்மை அறிவு

பார்ப்பது ஞானமே தவிர; கண்கள் அல்ல.
நற்குடியைக் குறிப்பது குணமேதவிர, பிறப்பு அல்ல.
மனத்திருப்திதான் உண்மைச் செல்வமே தவிர,
பணம் அல்ல.
தீய செயல்களிலிருந்து விலகுவதே உண்மை
அறிவாகும்.

—பஞ்சதந்திரம்

அறிவும் செயலும்

செயலில் இறங்கப் பயப்படுகிறவனுக்கு ஆழ்ந்த கல்வி ஞானமும் பிரயோஜனமளிப்பதில்லை. தொலைத்து விட்ட பொருளைத் தேடுவதற்குக் கையில் விளக்கு இருந்தபோதிலும் கண் குருடாக இருந்தால் என்ன பிரயோஜனம் ?

—பஞ்சதந்திரம்

நடுநிலைமை

நடுநிலைமை என்பது கோழை நாட்டின் ஆயுதம் அல்ல. பலம் பொருந்திய நாடுதான் நடுநிலைமை

வகிக்க முடியும். மன உறுதி, வீரியம், திறமை இவற்றில் திடநம்பிக்கையுடன் போதிய படைபலமும் பொருந்திய நடுநிலே பாராட்டத் தக்கது.

—சாணக்கியன்

குணப் பிறவி

இரக்கமுள்ள நெஞ்சில் அன்பு உண்டாகும்; நாணமுள்ளாரிடத்தில் அறம் பிறக்கும்; நன்மை, தீமைகளே அறியும் உள்ளத்தில் மெய்யுணர்வு தோன்றும்; ஆணவமற்ற இடத்தில் மரியாதை அமையும்.

—கன்பூஷியஸ்

நான் யார் ?

என்னேயறியேன் நான், என்னே யறிந்தேன் நான்
என்னல் நகைப்புக் கிடனுகும்—என்னே
தனே விடயமாக்க இரு நானுண்டோ வொன்ரு
அனேவர் அனுபூதி உண்மையால்.

—ஸ்ரீ ரமண மகரிஷி

உபதேசம்

நெருப்பைக் கிளறிவிட்ட பின்னரே ஹோமம் செய்ய வேண்டும். அங்ஙனம் மனத்தைக் கிளறிவிட்டுப் பின் உபதேசம் செய்ய வேண்டும்.

—கடோபநிஷத்

மண்

மண்ணிலிருந்துதான் நமது உடல் பிறந்தது. கடைசியில் அதோடுதான் போய்ச் சேரும். மரணம் எந்நேரமும் நம்மை அழைக்கலாம். அதற்கு நாம் காத்திருக்க வேண்டும். அதுவரை மண்ணே அழகு செய்யாவிட்டாலும், அசுத்தம் செய்யக்கூடாது.

—காந்தியடிகள்

தூய்மை

குடும்ப இன்பங்களே குவலயம் தரும் இன்பங்களில் தலை சிறந்தவை. குழந்தைகளிடம் பெற்றோர்களுக்குள்ள ஆனந்தமே மனிதனின் அறிந்த ஆனந்தங்களில் எல்லாம் புனிதமானது. அது அவர்கள் இதயத்தைத் தூய்மையாகவும், நல்லதாகவும் செய்கிறது.

—கார்லைல்

அமைதி அளித்த நூல்கள்

என் வாழ்நாள் முழுவதிலுமே, இரண்டு, மூன்று புத்தகங்களே எனக்கு மன அமைதி அளித்தன; இவற்றில் ஒன்று ஸ்ரீ ராமகிருஷ்ணரின் உபதேச மொழிகள். அவருடைய உபதேசங்கள் வங்க மொழியிலிருந்து ஆங்கிலத்திற்கு மாறிப் பின் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டும்கூட இவ்வளவு தூரம் மன அமைதி அளிக்க முடியுமானால், அவர் உபதேசங்களை நேரில் கேட்டவர்களுக்கு அவை எவ்வளவு ஆதர்சமளித்திருக்கும்? இந்த உபதேசங்களைப் படித்துப் பெரிவர்களும், சிறுவர்களும் கூட நல்லவர்களாக முடியும். நீங்கள் எல்லோரும் இந்த உபதேசங்களைப் படித்துப் பரிசுத்தமான வாழ்க்கை நடத்தக் கற்றுக்கொள்ள வேண்டும்.

—ராஜாஜி

நாமே பொறுப்பு

பிறர் நம்மை ஆண்ட காலத்தில் நமது கஷ்டங்களுக்கும் முறைகளுக்கும் பிறரைக் குற்றம் சொல்ல வசதியிருந்தது. ஆனால் இன்றைய ஜனநாயக அசராங்கத்தில் தவறு நடந்தால் நாமே பொறுப்பாளிகளாவோம். மக்கள் கெட்டவர்களாக இருந்தால் அரசாங்கம் நல்லாட்சி நடத்த இயலாது.

—ராஜாஜி

உழைப்பு

உழைப்பு தேகத்திற்குப் பலன் கொடுக்கும். விளையாட்டும் வேடிக்கையுங்கூட அவசியமானவை. உழைப்பும் உற்சாகமும் நிறைந்த ஊர் எல்லா விதங்களிலும் செழிக்கும்.

—ராஜாஜி

பிறர் நன்மையை நாடும் நாடு

எந்த மனிதனும் தனியாகச் சுகமடைய முடியாது. சமூகம் செழித்தால்தான் தனிக் குடும்பம் செழிக்கும். ஆதலால் பிறர் சுகத்தையும் நன்மையையும் நாடியே நாம் வாழவேண்டும்.

—ராஜாஜி

வேண்டுகோள்

பெற்றோர்களுக்கு என் வேண்டுகோள் இதுதான்; தம் குழந்தைகளுக்குச் சிறு வயதிலேயே கல்யாணம் செய்துசெய்து, அவர்கள் கழுத்தில் திரிகைக் கல்லைக் கட்டிப் போட்டுவிடக்கூடாது. பெற்றோர்கள், வளர்ந்து வரும் தம் சந்ததிகளின் நலத்தில் கண்ணும் கருத்துமாக இருக்க வேண்டுமே ஒழிய, அவர்கள் வீண் டம்பத்துடன் எதை எல்லாம் விரும்புகிறார்களோ அதையெல்லாம் வாங்கிக்கொடுத்துக் கொண்டிருக்கக்கூடாது.

—காந்தியடிகள்

உண்மையும் அன்பும்

நன்மார்க்கத்தின் முதல் கொள்கை என்ன தெரியுமா? உண்மையைப் பேசுவதும், உண்மையைச் சிந்திப்பதும், உண்மையைச் செயலில் காட்டுவதுமே ஆகும். உண்மையினாலும் அன்பினாலும் உலகம் முழுவதையும் நாமே வென்றுவிடலாம் என்பது என் திடமான நம்பிக்கை.

—காந்தியடிகள்

பெண் யார்?

சுயமாகத் தியாகம் பண்ணும் பண்பும் தூய்மையும் சேர்ந்து வடிவெடுத்த உருவமாகப் பெண் இல்லாவிட்டால், பிறகு பெண் என்பதற்கே அர்த்தமில்லை.

—காந்தியடிகள்

வேறில்லை

காமம் போன்ற தீ வேறில்லை;
பகை போன்ற மூச்சைப் பிடிக்கும் பிடி வேறில்லை;
மோகம் போன்ற கண்ணி வேறில்லை;
ஆசை போன்ற ஆறு வேறில்லை.

—கௌதம புத்தர்

இரு வழிகள்

மன நாசத்திற்கு இரு வழிகள்
அவை யோகமும் ஞானமும்
விருத்தியை அடக்குதல் யோகம்
தெளிந்த காட்சி ஞானம்.

—உபநிடதம்

முள்

முள் நிறைந்த செடியிலேதான் மணமும் அழகும் நிறைந்த ரோஜாப் பூ மலர்கிறது. அதுபோலவே சொல்லமுடியாத துயரங்களுக்கும், தாங்க முடியாத எதிர்ப்புகளுக்கும் மத்தியில்தானே உண்மை பூத்து மலரும்.

—காந்தியடிகள்

இயற்கை

மனிதன் ஓர் அபூர்வ சிருஷ்டி; எவ்வளவுதான் கோரக் காட்சியாயினும், சகிக்க முடியாத நாற்றமாயினும், கர்ணகடூரமான சப்தமாயினும், ஆபாசப் பழக்க

மாயினும், பழக்கத்தினுல் அவை அவனுக்கு இயற்கையாய் விடுகின்றன.

—டால்ஸ்டாய்

ஜனநாயகம்

மக்கள் அரசியல் அதிகாரத்தைப் பெற்று விட்ட பிறகு, மக்களுடைய சுதந்திரத்தில் அரசாங்கம் தலையிடுவது என்பது மிக மிகக் குறைந்து விடுகிறது. இதையே வேறு வார்த்தைகளில் சொல்லுகிறேன்; அரசாங்கத்தின் தலையீடு இல்லாமல் தன் விவகாரங்களை இலகுவாகவும், நிரந்தரமாகவும், பயன்தரக்கூடிய முறையிலும் கவனித்துக் கொள்ளும் நாடுதான் உண்மையில் ஜனநாயக நாடாகும். இப்படிப்பட்ட நிலைமை ஒரு நாட்டில் இல்லை என்ருல், அந்த நாட்டின் அரசாங்கம் பெயரளவில்தான் ஜனநாயக அரசாங்கமாக இருக்கிறது.

—காந்தியடிகள்

பெருநஷ்டம்

கல்வியில்லாது போய்விடுவது மனிதனுக்குப் பெரிய நஷ்டமாகாது; பக்தியில்லாது போய்விட்டால் அது பெரு நஷ்டமாகும்.

—தர்மச் சக்கரம்

சிறந்தவர்கள்

நாட்டுப் பற்றில் ஜப்பானியரை மிஞ்சியவர் இல்லை; தூய்மையில் இந்துக்களை மீறியவர் இல்லை; ஆண்மையில் ஐரோப்பியரை வென்றவர் இல்லை; மனிதத் தன்மையின் பெருமையை ஆங்கிலேயர் அறிந்துள்ளது போல உலகினில் வேறு எவரும் அறிவதில்லை.

—சுவாமி விவேகாநந்தர்

அனுபவ ஞானம்

நாம் ஓர் அனுபவத்திலிருந்து, அது போதிக்கும் ஞானத்தை மட்டிலுமே அடைய வேண்டும்; அதோடு நிற்கவேண்டும். இல்லாவிட்டால், சூடேறிய இரும்படுப்பில் உட்கார்ந்த பூனையைப் போல ஆகிவிடுவோம். அந்தப் பூனை மறுபடியும் சூடேறிய இரும்படுப்பில் உட்காரவே உட்காராது. அது சரிதான். ஆனால் குளிர்ந்த இரும்படுப்பிலும் மறுபடியும் ஒருபோதும் அது உட்காராது.

—மார்க் ட்வெய்ன்

ஒருமைப் பாடு

உலகத்தின் தர்மம் ஒருமைப்பட்டு வாழ்வதே. சிருஷ்டியில் ஒன்றுக் கொன்று பயன் படவும், ஒன்றேடொன்று இணங்குமாறும் அனைத்தும் அமைக்கப் பெற்றுள்ளது. கீழ்ப்பொருள்கள் ஒன்றை ஒன்று தாங்கும்படி அமைக்கப் பெற்றுள்ளன என்பதை எளிதில் கண்டு கொள்கிறோம். இதைப் போலவே மேல்வகைப் பிராணிகளாகிய நாமும் ஒன்றுபட்டு வாழ அமைக்கப் பெற்றிருக்கிறோம் என்பதை உணரவேண்டும்.

—மார்க்கஸ் ஒளரேலியஸ்

குழந்தை விளையாட்டு

பிரபஞ்சமானது, எண்கள் விதிகள் என்னும் சில கருத்துக்களின் தொடர்புகளைக் கண்டு பிடிப்பதற்குரிய ஒரு கணித சூத்திரமல்ல; இறுதியில் ஒரு சுன்னம் அல்லது சூனியத்தில் முடிவடைவதுமல்ல; சக்திகளின் ஒரு சமன்பாட்டைத் தன்னுள் கொண்ட ஒரு பௌதீக இயக்கமுமல்ல. அது தன்னையே காதலிக்கும் ஒருவனின் இன்பப் பெருக்காகும்; ஒரு குழந்தையின் விளையாட்டாகும்; முடிவில்லாமல் சிருஷ்டிக்கும் தன் ஆற்றலிலிருந்து

தோன்றும் பரவசத்தினுல், உன்மத்தனுகும் கவியின் முடிவற்ற சுயப் பெருக்காகும்.

—அரவிந்தர்

வளர்ச்சிக் குறி

தொர் வால்ட்ஸன் என்பவர் டென்மார்க் தேசத்தின் சிறந்த சிற்பிகளில் ஒருவர். தாம் கடைசியாய்ச் செய்த ஒரு சிற்பத்துக்கு அருகே நின்று அவர் அழுது கொண்டிருந்தார்.

"ஏன் ? இது உமக்குத் திருப்தி தர வில்லையா ?" என்று ஒரு நண்பர் கேட்டார்.

சிற்பி, "அல்ல; இதில் ஒரே ஒரு குற்றம்கூட நான் காணவில்லை. அதனுல்தான் அழுகிறேன். ஏனெனில், என் கற்பனு சக்தி நலியத் தொடங்கி விட்டது என்றே இது காட்டுகிறது" என்று பதில்அளித்தார்.

இந்தியாவில் பத்திரிகைகள்

இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தில் கூறப் பெற்றுள்ள மொழிகளில் இந்தியாவில் வெளியாகும் தினப் பத்திரிகை, வாரப்பத்திரிகை, மாதப் பத்திரிகை முதலியவற்றின் எண்ணிக்கை 6215.

பாடசாலை - ரயில் கண்காட்சி

இன்று அமெரிக்காவில் எங்கோ ஓர் இடத்தில் ஒரு என்ஜினும் இரண்டு பெட்டிகளும் கொண்ட ரயில் வண்டி ஒன்று நிற்கிறது. அது தினசரி குறித்த நேரத்தில் ஓடும் வண்டி அல்ல. அது பெரும்பாலும் ஒரு ஓரத்து இரும்புப் பாதையில் ஒதுங்கி நிற்கும். எனினும், நாள் தோறும் பலர் அதற்குள் போய்ப் பார்க்கின்றனர். அது அவர்களுக்கு உணர்ச்சியூட்டும் கவர்ச்சியாக விளங்குகிறது;

"அமெரிக்கப் பாடசாலை முன்னேற்றம்" என்பது அந்த வண்டியின் பெயர். ஒரு நூற்றாண்டு அளவுக்கு மேற்பட்ட காலத்தில் அமெரிக்கப் பாடசாலையில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தைக் காட்டும் காட்சிகள் அதன் இரண்டு பெட்டிகளிலும் உள்ளன. அமெரிக்க எல்லைப் புறத்துக் காலத்தில் இருந்த ஓர் அறை கொண்ட மரத்தால் செய்யப்பட்ட பாடசாலை முதல், எட்டுக் காட்சிகள் உள்ளன. ஆரம்ப காலத்துப் பாடசாலைகளும், இடைக் காலத்துப் பாடசாலைகளும் பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுயில் இருந்த பாடசாலைகளும் இன்றுள்ள அவற்றிற்கு மாறான பாடசாலைகளும் காட்டப் பெற்றுள்ளன.

விசேஷமாக அமைக்கப்பெற்றுள்ள இரண்டு பெரிய பெட்டிகளில் பழைய வகுப்பறைகளும் புதிய வகுப்பறை உள்ளன. நாட்டைத் தோற்றுவித்த எல்லைப்புற வாசிகளின் பிள்ளைகள் படித்த வகுப்பறைக் காட்சிகளைப்

பழையவைகள் உள்ள பெட்டியில் காணலாம். பத்தொன்பதாம் நூற்ருண்டுத் தொடக்கத்தில் இருந்த அநேக வீடுகளைப் போலவே, பள்ளிக்கூடங்களும் அவசரம் அவசரமாகக் கையால் அறுத்த கட்டைகளால் கட்டப்பெற்றன. அவை நன்ருய் அமைக்கப்படவில்லை. பெரிய அடுப்பு உஷ்ணம் ஊட்டியது. ஒரு கதவு வழியாகவும் ஒரு சிறு சன்னல் வழியாகவும் காற்று வந்தது. பள்ளிக்கூடத்திலிருந்த மேஜை, நாற்காலிகள் முதலியவை மிகவும் சாதாரணமானவை; அசௌகரியமானவை. கட்டைகளைப் பிளந்து, முளைகளைக் கால்களாக்கிச் செய்தவை, பிள்ளைகள் இருந்த பெஞ்சுகள். ஒரு பிள்ளைக்கு ஒரு புத்தகம் இருக்க வேண்டும் என்பது லட்சியம். அது அபூர்வமாகத்தான் கைகூடியது.

குழந்தைகள் படிப்பு சாதாரணமாய் ஆரம்பித்த காலத்து வகுப்பறையையும், அது ஆரம்ப காலத்துச் சாய்வு மேஜைகள் உள்ள வகுப்பறையாகவும், கரும்பலகை உள்ளதாகவும், மெக்கபி எழுதிய வாசகப் புத்தகம் உள்ளதாகவும் விளங்கியதை பழையவை உள்ள பெட்டியில் காணலாம். இறகு பேனக்களையும், மிகவும் அலங்காரமாக எழுதப்பெற்ற எழுத்துக்களையும் மண் மைக்கூடுகளையும் கண்ணுடி மைக்கூடுகளையும் அதில் காணலாம். ஆரம்பகாலத்து அமெரிக்கப் பாடசாலைச் சாமான்களுள் பல்வகை வடிவங்கள் உள்ள பள்ளிக்கூடத்து மணிகள் உள்ளன. வயதானவர்கள் அவற்றைப் பார்க்கும்போது அவற்றில் அவர்களுக்கு மிகுதியான பற்று உண்டாகிறது.

புதியவைகள் உள்ள பெட்டியில் இந்தத் தலைமுறை பிள்ளைகளுக்குப் பழக்கமான தற்கால வகுப்பறைக் காட்சிகள் உள்ளன. திமிங்கில எண்ணெய் விளக்குகள்

ஒழிந்துவிட்டன. செம்மையாய்ச் செய்யப்பட்ட ஒளிவீசும் விளக்குகள் ஏற்பட்டுவிட்டன; இல்லாவிடில் இயற்கை வெளிச்சம் கிடைக்கத் தக்கவாறு ஜன்னல்கள் அமைக்கப் பெற்றுள்ளன. இறகு பேனுக்கள் மறைந்து விட்டன; சிலேட்டையும் சாக்கையும் காணேம். காகிதம் வந்து விட்டது. பழையவைகள் உள்ள பெட்டிகளில் காட்சி யாக வைக்கப் பெற்றுள்ள பிரம்புகளைக் கொண்டு இன்று வகுப்பில் ஒழுங்கு நெறியைக் காப்பதில்லை; அதற்கு அவர்கள் பல முறைகளைக் கையாள்கிருர்கள். தற்கால வகுப்பறையைக் காட்டும் பெட்டியில் ஐந்து காட்சிப் பொருட்கள் உள்ளன. அவை வகுப்பறைகளையும் அங் குள்ள பொருட்களையும், கேட்டும் கண்டும் படிக்கும் கருவி களையும் காட்டுகின்றன. இந்தக் காலத்துப் பள்ளிக் கூடக் கட்டிடங்களையும் வகுப்பறைகளையும் படங்கள் வரைந்திருக்கிருர்கள்; படம் எடுத்திருக்கிருர்கள். அவை களும் அதில் இருக்கின்றன.

"அமெரிக்கப் பாடசாலை முன்னேற்றம்" என்னும் ரயில் வண்டியின் இரு புறமும் பிள்ளைகள் வகுப்புகளைக் காட்டும் காட்சிகள் பல நிறங்களில் அழகாகப் பொறிக் கப் பெற்றுள்ளன. இந்த வண்டி இன்னும் மூன்று வருஷங்களுக்கு அல்லது அதற்கு அதிகமாக வருஷத் துக்கு நாற்பது பெரிய அமெரிக்க நகரங்களுக்குச் செல்லும்.

ஹென்றி போர்டு மியூசியம், மிச்சிகனிலுள்ள டியர் பான் கிரீன்பீல்ட் வில்லேஜ், என்சைக்கிளோப்பீடியா அமெரிக்காஞ என்பனவற்றின் ஆதரவில் இந்த வண்டி அமைக்கப் பெற்றது. செஸப்பீக் அண்டு ஓஹியோ ரயில் ரோடு கம்பெனியார் வண்டிகள் கொடுத்து உதவினர்.

கண்காட்சி மூன்று நோக்கங்கள் கொண்டது.

(1) கற்றுக் கொடுப்பதை அமெரிக்க இளைஞர் தொழிலாகக் கொள்ள அவர்களுக்கு ஊக்கமும் அதிக மான பற்றும் ஊட்டுதல்.

(2) அமெரிக்க ஆசிரியர் செய்துள்ள பணிக்காக அவர்களை வாழ்த்துதல்.

(3) பள்ளிக்கூடங்கள், பள்ளிக்கூட வசதிகள் ஆகிய வற்றில் அக்கறையை அதிகப்படுத்துதல்.

சர்வ தேச நெல் விளைச்சல்

1958—59-ஆம் ஆண்டில் சர்வ தேச நெல் விளைச்சல் (சீன தேசம் நீங்கலாக) பதின்மூன்று கோடியே பத்து லட்சம் டன். அதில் இந்தியா வில் விளைந்தது நாலு கோடியே முப்பத்தேழு லட்சம் டன்.

Edited, Printed and Published by A. K. CHETTIAR at Kumari Malar Press, 100, Mowbrays Road, Madras-18

கவுண்டர் & கம்பெனி
(பிரைவேட்) லிமிடெட்

தலைமை ஆபீஸ்:	கிளை ஆபீஸ் & ஷோரூம்
கூட்ஸ் ஷெட் ரோடு	7/69, ஜெயில் ரோடு
பொள்ளாச்சி.	கோயமுத்தூர்

கோயமுத்தூர் & நீலகிரி ஜில்லாக்களுக்கு:

டாடா-மெர்சிடெஸ்-பென்ஸ் டீசல் டிரக்,

ராயல் என்பீல்ட் மோட்டார் சைக்கிள்

விற்பனையாளர்கள்.

நா. மகாலிங்கம், B.Sc., A.M.I.E., M.L.A.,

மானேஜிங் டைரக்டர்.

குமரி மலர் வெளியீடுகள்

1.	மலேயா முதல் கனடா வரை	ரூ.	2 – 50
2.	அமெரிக்க நாட்டில்	"	5 – 00
3.	கரீபியன் கடலும் கயானாவும்	"	4 – 00
4.	உலகம் சுற்றும் தமிழன்	"	2 – 00
5.	பிரயாணக் கட்டுரைகள்	"	1 – 50
6.	அண்டை நாடுகள்	"	0 – 90

வெளிவந்துவிட்டன.

ஐரோப்பா வழியாக

விரைவில் வெளிவரும்.